In Public domain, Digitization Muthulakshmi Research Academy

திருமுருகனின்

நீல மயிலும் செஞ்சேவலும்



பூசை. ச. அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சிற்றம்பலம்சர்வம் சிவகுகமயம்

பெருத்த பாருளீர் நீங்கள் வாருமேமயிலையும் அவன் திருக்கை அயிலையும் அவன் கடைக்கண் இயலையும் நினைந்திருக்க வாருமே !!

நன்றி மலர்கள்

பேரன்புடையீர்,வணக்கம்

திருத்தணியில் உதித்தருளும் ஒருவன் மலைவிருத்தன் எனதுள்ளத்தில் உறைகருத்தன் ஆன முருகப்பெருமான் நடத்தும் மயிலின் அருமைபெருமைகளையும் அதனோடு இணைந்த செஞ்சேவலின் பெருமைகளையும் விளக்கும் வகையில் இந்நூல் மலர்கிறது. எமது கலைக்கூடம் சிவபெருமானின் அரிய பெரிய சிறப்புகளைப் பேசும் வகையில் சிவமஞ்சரி என்னும் நூலைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. அவ்வகையில் முருகப் பெருமானின் சிறப்புக்களையும் வெளியிட குமாரமஞ்சரி என்னும் தொடர்நூலை வெளியிட திட்டமிட்டோம். முதல் மலராக வேல் வெற்றிவேல் என்னும் நூல் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து நீல மயிலும் செஞ்சேவலும் என்னும் தலைப்பில் மயில் சேவல் ஆகியவற்றின் பெருமைகளைக் கூறும் வகையில் நூல் தொகுக்கப்பட்டது. அதை வெளியிட முன்வந்த தேவகோட்டை திருமதி. சீதாலட்சுமி ஆச்சி அவர்கள் படங்கள் எழுத உதவினார்கள். பல்வேறு திருப்பணிகளால் அப்பணியைத் தொடராமல் விட்டுவிட்டோம். இப்போது சென்னை CLRI ல் பணிபுரிந்துவரும் குகஸ்ரீ டாக்டர் துரைராஜ் அவர்கள் அளித்த ஊக்கத்தின் பேரில் நூலை நிறைவு செய்யப்படு புதிய பொலிவுடன்

"2010 புத்தாண்டு நல்வாழ்த்துக்களுடன்"

திருத்தணிகையில் நடைபெறும் திருப்படித் திருவிழா நன்னாளில் வெளிவருகின்றது. இந்நூலை அன்பர்கள் படித்து, மயிலையும் செஞ்சேவலையும் வாழ்த்தி வணங்கி முருகன் அருள்பெற வேண்டுகிறோம்.

வேழமயில்(தெய்வயானை) வேடமயில் (வள்ளியம்மை) உடனாய செஞ்சேவற் கொடியோன் திருமுருகன், அன்பர்கள் யாவருக்கும் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளித்து அருள் பாலிக்க வேண்டுமென்று அவர்தம் பொற்பாதங்களைப் பணிந்து அன்புடன் வேண்டுகிறேன்.

- பூசை. ச. அருணவசந்தன்

அருட்கொடை வழங்கி உதவிய அன்பர்கள்

திருமுருக திருவருட் சபா
பெருங்களத்தூர், சென்னை 63.

சிவஸ்ரீ டாக்டர். D. துரைராஜ்
CLRI அடையாறு சென்னை

சிவஸ்ரீ டாக்டர்.V. ஆறுமுகம்
CLRI அடையாறு சென்னை

சிவஸ்ரீ B. தங்கராஜ்
CLRI அடையாறு சென்னை

சிவஸ்ரீ ஐயன்பெருமாள்
CLRI அடையாறு சென்னை

ஷண்முககேந்திரம், சிவஸ்ரீ.ரவி

திருமதி, பிரேமா வெங்கட்ராமன்
ஈஞ்சம்பாக்கம் சென்னை-41

திருமதி. சுமதி சுப்பிரமணியன்,
நவிமும்பை

சிவஸ்ரீ L. ஆறுமுகம்
சுகாதார ஆய்வாளர் (ஓய்வு)சென்னை மாநகராட்சி

சிவாகமஸ்ரீ. ஞானஸ்கந்த (மூர்த்தி) சிவாச்சாரியார்
அறுபடைவீடு, பெசன்ட்நகர், சென்னை

அழகன் திருப்பணிமணி **குகஸ்ரீ .எஸ்.குமார்**
பாரத ஸ்டேட் பேங்க் மேனாள்அதிகாரி.திருப்பூர்

திருமதி .எஸ்.சியாமளா பாரத ஸ்டேட் பேங்க் திருவான்மியூர்

திரு.கிருஷ்ண குமார் வாரன் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4

சிவஸ்ரீ முத்துக்குமார சிவாசாரியார். ஸ்ரீ பால விநாயகர் ஆலயம், வாரன் ரோடு, மயிலாப்பூர், சென்னை-

சிவஸ்ரீ சாமி சுப்பையா ஸ்தபதியார் குமாரர் சிவஸ்ரீ . சிவா (எ) சுவாமிநாத ஸ்தபதியார்
ஏகாம்பரநாதர் மேற்கு மாடவீதி, காஞ்சிபுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

உ

சர்வம் சிவகுக மயம் - வேலும் மயிலும் துணை

அயில்கையில் வெயில்எழ மயில்மிசை-அக் குக்குடக் கொடி செருக்கப் பெருக்கமுடன்
இயலும் இசைகளும் நடனமும் வகை யெழ வரு பெருமாளே!

நீல மயிலும் செஞ்சேவலும்



தமிழர் தம் தனிப் பெருங்கடவுளான செவ்வேள் பரமன் முருகனுக்கு வாகனமாகவும், கொடியாகவும் இருப்பவை மயிலும் சேவலும். இவை இரண்டும் பிரணவத்தின் வடிவமென்று தத்துவ நூல்கள் கூறுகின்றன. அளவில்லா ஆற்றலும், பெருமையும் உடையவை. முருகனடியார்கள் முருகப் பெருமானைப் போற்றி வழிபடுவதோடு கூடவே அவனுடைய வேலையும் மயிலையும் போற்றி வழிபடுகின்றனர்.

மயிலும் சேவலும் அன்பர்களின் வாழ்வில் உண்டாகும் பகைகளை அழித்து அவர்களுக்கு இன்பத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றன.

குமார மஞ்சரியின் முதல் மலரில் வேலின் சிறப்புகள் பற்றிய செய்திகளை அறிந்து மகிழ்ந்த நாம், இந்த இரண்டாவது மலரின் முதற்பகுதியில் மயில் பற்றிய சிறப்புச் செய்திகளையும், இரண்டாவது பகுதியில் சேவல் பற்றிய செய்திகளையும் அறிந்து மகிழலாம்.

சேவற்கொடியேந்தி நீலமாமயிலின் மீது வரும், வேழமயில் வேட மயில் உடனாகிய முருகப்பெருமானின் அருளால் எல்லோரும் சகல செல்வயோகமிக்க பெரு வாழ்வைப் பெற்று இன்பமுடன் வாழப் பிரார்த்திக்கிறோம்.

– சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீல மயிலும் செஞ்சேவலும்



நீலமும் சிவப்பும் தமிழர் வாழ்வில் தெய்வீகம் சார்ந்த வண்ணங்களாக விளங்கு கின்றன.இவை இரண்டும் காவல், வளமை ஆகியவற்றைக் குறிக்கும் இயற்கையின் குறி யீடுகள். நீலம் காவல் காத்து நிற்பதற்கும் பச்சை இயற்கை வளத்திற்கும் அடையா ளங்கள்.

இவ்விரண்டு வண்ணங்களும் கலந்த தாகவே நமது தெய்வங்கள் உள்ளன. சிவ பெருமான் செந்தழல் செம்மேனியனாக நிற்க, அவனருகே பச்சை மரகதப் பெண் கொடியாக உமையம்மை விளங்குகிறாள். கருமாமுகில் அனைய நீலமேனி நெடியோ னாகிய திருமாலுடன் மாணிக்கச் செவ் வொளி வீசும் திருமகள் நிற்கின்றாள். இவ்வாறு அனைத்து தெய்வங்களும் இரண்டு வண்ணத்தோடு தொடர்புடை யவனாக விளங்குகின்றன. திருமால் பச்சை வண்ணனாகவும் பவளவண்ணனாகவும், தனித்தனிக் கோயில்களில் இருந்து அருள் பாலிப்பதைக் காஞ்சிபுரத்தில் காண்கி றோம். சோழ மண்டலத்தில் காளிதேவி பச்சைக்காளி, பவளக் காளி என்ற பெயர் களில் வீற்றிருந்து அருள்பாலிக்கிறாள்.

பச்சைமேனியை உடைய திருமாலின் கரங்களும் கண்களும் சிவந்த நிறத்துடன் விளங்குகின்றன. சிவந்த மேனியை உடைய சிவபெருமானின் கழுத்து கறுத்த நீலநிற மாகக் காட்சி அளிப்பதனால் காண்கி றோம். இலக் கியங்கள் அவரை நீலமாமணி மிடற்றன் என்று கூறுகின்றன. இப்படி ஓர் உருவில் இருவண்ணமும் கலந்திருப்ப தையும் காண்கிறோம். நீலம் என்று குறிக்கப் பட்டாலும், மக்கள் அடர்நீலமான கறுப் பையும், வெளிர் நீலம் பாரித்த பச்சையை யும் ஒன்றாகவே கருது கின்றனர். திருமாலை நீலவண்ண நெடியோன் என்றும், பச்சை மாமலை மேனியான் என்றும், கருமுகில் வண்ணன் என்றும், பலவகையாகக் கூறு வதைக் காண்க. முருகனின் மயிலும் மரகதப் பச்சை மயில் என்றும், நீலச்சிகண்டி என்றும், கருங்கடல் கருமுகில் அனைய மயில் என்றும் போற்றப்படுகிறது.

அதுபோலச் சிவப்பு என்ற போது சிவப்பை மட்டும் குறிக்காது பொன் வண்ணம் கலந்த இளஞ்சிவப்பையும் குறிக் கும். மாணிக்கம், செந்தழல் ஆகியவற்றை யும் இதனுடன் ஒப்பிடுவர். சிவபெருமான் செந்தழல் மேனியன் என்றும்,பொன்னார் மேனியன் என்றும், மாணிக்கச் சோதியான் என்றும் கூறப்படுவது சிந்திக்கத்தக்கதாகும். முருக வழிபாட்டிலும் இவ்வண்ணக் கோவை இடம் பெறுகிறது.

முருகனின் வாகனமான மயில் ,பச்சை கலந்த நீலமாகவும், சேவல் பொன்வண்ணம் கூடிய சிவப்பு நிறமாகவும் உள்ளன. சிவப்பு நெருப்பையும் பச்சை நீரையும் குறிக்கும் வண்ணங்களாகும். இவை சிவசக்தியரின் குறியீடுகளாகும்.

பவள(செந்நிற) மணிகளையும் பச்சைவண்ண மணிகளையும் மாறிமாறி வரும்படிக் கோர்த்து மாலைகள் அணிந்தனர். அவை மணிமிடை பவளம் என்று அழைக்கப்பட்டன. சங்க இலக்கியத்தில் அகநானூற்றின் ஒரு பகுதிக்கு மணிமிடை பவளம் என்ற பெயர் வழங்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேலும் மயிலும் துணை

பெருத்த பாருளீர் நீங்கள் வாருமே! மயிலையும் திருக்கை அயிலையும் அவன் கடைக்கண் இயலையும் நினைந்திருக்க வாருமே

நீலமா மயில்

அழகன் முருகன் என்றதும் அவனுடன் அவனுடைய அழகு மயிலும் நம் நினைவுக்கு வருகிறது. மயில் முருகனுக்கு வாகனமாக இருப்பதுடன் பக்தர்களின் பகைகளைக் கடிந்து அவர்களுக்கு வெற்றியைத் தந்து அருள்கிறது. எனவே, வலிமையும் வல்ல மையும் கொண்ட மயிலை முருகனடியார்கள் சிறப்புடன் போற்றி வழிபடுகின்றனர். முருக னுக்குப் பல்வேறு மயில்கள் வாகனமாக அமைந்துள்ளன.

திரிபுரதகனத்தின்போது, திருமால் தன் மைத்துனனான சிவபெருமானை இடப வடிவம் கொண்டு தாங்கினார். அதுபோல சூர சங்காரத்தின் போது, முருகனின் மாம னான இந்திரன் மயில் வடிவம் கொண்டு தன் மருகனைத் தாங்கினான். மேலும், ஓங்காரம், வேதம் முதலியனவும்மயில்வடிவு கொண்டு முருகனைச் சுமக்கும் பேறு பெற் றன.

குமாரமஞ்சரி இரண்டாவது மலரின் முதற்பகுதி மயிலின் பெருமைகளை விளக்கு வதாக மலர்கிறது. இதில் முருக வழிபாட் டில் இடம் பெற்றுள்ள பல்வேறு மயில் கள், மயில் தோன்றிய வரலாறு, சிறுபான்மை வழிபாடானமயிலார்எனும் பண்டிகை. முருக வழிபாட்டில் ஈடுபட்ட பதியிலாரான மயிலாட்டிகள், மயிலை நினைவு கூரும் முருகன் ஆலயங்கள், ஆகம பூஜா பத்தி நூல்களில் மயில் வழிபாடு முதலிய செய்திகள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

முருகனுடன் கூடவே அன்பர்கள் அவனது மயிலையும் சேவலையும் போற்றித் துதிக் கின்றனர். அருளாளர்கள் இவற்றைப் புகழ்ந்து பலபாடல்களை அருளிச் செய்துள் ளனர்.

அருணகிரிநாத சுவாமிகள் மயிலைப் புகழ்ந்து மயில் வகுப்பு, மயில் விருத்தம் ஆகியவற்றையும் பாம்பன் சுவாமிகள் பகை கடிதல் என்ற நூலையும் வண்ணச் சரபம் தண்டபாணிசுவாமிகள் மயில் அலங்காரம் என்ற நூலையும்அருளிச் செய்துள்ளார் கள்.

அன்பர்கள் இவற்றைப் பக்தியுடன் பாராயணம் செய்கின்றனர். இந்த நூல் களைப் பற்றிய சிறப்புச் செய்திகளும் இம் மலரில் இடம் பெற்றுள்ளன.

அன்பர்கள்அனைவரும் மயிலின் பெருமைகளை உன்னி அதனைப் போற் றித் தம் பகைகளைக் கடிந்து இனிது வாழச் செவ்வேட் பரமனின் திருவடி களைப் போற்றிப் பணிகின்றோம்.

–சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேலும் மயிலும் துணை

முருகனடியார்கள் வேலும் மயிலும் துணை என்று துதித்து வேலையும் மயிலையும் வாழ்த்திய பின்னரே, எந்தச் செயலையும் தொடங்குவர்

வேலுக்கும் மயிலுக்கும் இடையேயுள்ள ரகசியத்தை ஞானமொழி எனப்படும் சித்தர் மொழி கூறும் ஒரு சிறப்பான விளக்கத்தை இங்குக் காணலாம்.

வேலுக்குரிய பெயர்களில் ஒன்று அயில் என்பதாகும். மயில் என்பதிலேயே அயில் என்பதும்மறைந்துள்ளது. ம்+ அயில் = மயிலாகிறது." ம்" என்ற எழுத்து ஒடுங்குதல் சலனமற்றிருத்தல் என்பதன் குறியீடாகும். அயில் என்ற வேலானது ஞானமயமாதலின், மயில் என்பது ஆன்மஞானம் பெற்று அதில் ஒடுங்கிச் சலனமற்றிருத்தலைக் குறிக்கின்றது.

இந்த மரபுப்படி வேல் என்று சொல்லும் போது அது புறப்பகைகளை வெல்லுவதையும் மயில் என்பது உட்பகைகளை வென்று மனதில் குமாரனைத் தரிசனம் பெற வைப்பதையும் குறிக்கிறது .

ஞானம் எனும் வேலைப் பெற்ற ஆன்மா தானே மயிலாகி விடுகிறது. அதன் மீது முருகன் எழுந்தருள்கின்றான். தன்னைத் தானே அறிந்து கொள்ள வைக்கின்றான். அப்போது தான் வேறு முருகன் வேறு அல்ல என்ற நிலை உண்டாகிறது. இந்நிலையை அருணகிரிநாத சுவாமிகள்,

-நீவேறெனாதிருக்க நான் வேறெனா திருக்க-என்று பாடிப் பரவுகிறார். ஞான வேலைப்பெற்ற அன்பர்களின் ஆன்மா, முருக வழி பாட்டினால் மயிலாகி அவனைத் தாங்கும்பேறு பெறுதலை அறியலாம்.

மயில்தண்டம்

அரசனுக்குரிய விருதுகளில் தலைமையானது செங்கோல் எனும் தண்டமாகும். இது கலையழகுடன் அவனுக்குரிய சின்னத்தை உச்சியில் பெற்றிருக்கும். ஆலயங்களில் சுவாமி வலம் வரும் போதும், அரசர்கள் வலம் வரும்போதும், கட்டியக்காரன் என்பவர் இந்த தண்டத்தை ஏந்தியவாறு திருக்கூட்டத்திற்கு முன்பாக வருவார். இது அரசனின் வருகையைத் தெரிவிக்கும் அடையாளங்களில் ஒன்றாகும்.

கலையரசிகளான நாட்டியப் பெண்கள் தலைக்கோலையும் பாசுபத சைவர்கள் கட்டங்கத்தையும், சைவர்கள் ரிஷப தண்டத்தையும், வைணவர்கள் கருட தண்டத்தையும் ஏந்துகின்றனர். அதுபோல முருகனின் திருஉலாவிற்கு முன்பாக மயில் வடிவத்தை உச்சியில் கொண்ட தண்டத்தை முன்னே எடுத்துச் செல்வது வழக்கம்.

இது வெள்ளி (அ) தங்கத்தால் செய்யப்பட்ட தண்டத்தின் உச்சியில் மயில் உருவம் விளங்கும்படி அமைக்கப்பட்டிருக்கும். முருகன் தேவேந்திரலோகத்தில் சிம்மாசனத் தில் அரசராக கொலு வீற்றிருப்பவன். எனவே,அவனுக்குச் செங்கோல் உரித்தாகிறது. திருவான்மியூர் பாம்பன் சுவாமிகள் ஆலயத்தில் மயூர வாகன சேவனம் விழாவில் உலா வருவதற்கென இரண்டு வெள்ளி மயில் தண்டங்கள் உள்ளன

சேவல் தண்டம் -சேவல் முருகனின் கட்டியங்காரனாக இருந்து அவனுடைய வரவை அறிவிக்கின்றது. எனவே, முருகனுடைய தண்டத்தின் உச்சியில் சேவலை அமைக்கும் வழக்கமும் உள்ளது.

பழனியில் தண்டாயுதப் பெருமான் உலாவரும் போது சேவல் உருவத்தை உச்சியில் கொண்ட தண்டத்தை ஏந்தியவாறு அதற்குரியவர் கட்டியம், பராக், எச்சரிக்கை முதலியன வற்றைச் சொல்லி வருகின்றார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயிலும் சேவலும் (பூர்வ கதை)

முருகன் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றுவதற்கு முன்பாகவே ஒரு குகையில் யோக நிலையில் இருந்தார். அப்பொழுதே அவருக்குச் சேவலும் மயிலும் கொடியாகவும் வாகனமாகவும் இருந்தன. இது பலரும் அறியாத செய்தியாகும். இப்பொழுது மயிலாகவும் சேவலாகவும் இருப்பவர்கள் ஆதியில் சூரன், பதுமன் என்ற அரசகுமாரர்களாக இருந்தவர்கள். அவர்கள் கடுந்தவம் செய்து இந்த வடிவைப் பெற்றனர். அந்த வரலாறே நடைமுறையில் உள்ளதாகும். அதைச் சுருக்கமாக இங்குக் காணலாம்.

சிவபரப்பிரம்மம் முருகனாக அவதாரம் செய்வதற்கு முன்பாக ஒரு குகையில் இருந்தார். அவர் மயில் வாகனத்தையும் சேவற்கொடியையும் கொண்டிருந்தார். இவை இரண்டும் பிரணவத்தின் வடிவங்களாகும்.

ஒருசமயம் சுக்கிலவாது என்ற நாட்டினை ஆண்டு வந்த அரசனின் நான்கு புதல்வர்களில் மூத்த இருவர் அகத்தியரைச் சந்தித்தனர். அவரிடம் முனிவர் பெருமானே, தாங்கள் வணங்கும் தெய்வம் எது? என்று வினவினர்.

அகத்தியர் அவர்களை நோக்கி, குமாரர்களே! யான் முருகனையே அனுதினமும் வணங்குகின்றேன். ஞானத்தையும் முத்தியையும் நல்கும் அவருடைய திருவடிகள் மயிலின் மீதும் சேவலின் மீதும் பதிந்திருக்கின்றன. ஆதலால் அவை மிகவும் பேறு பெற்றவை என்றார்.

அதைக் கேட்ட இளவரசர்களுக்குத் தாமும் மயிலும் சேவலுமாக ஆக வேண்டும் என்ற எண்ணம் உதயமாயிற்று. அகத்தியரிடம் மந்திர உபதேசம் பெற்றுக் கயிலையை அடைந்து முருகனைக் குறித்துப் பஞ்சாக்கினி மத்தியில் நின்று கடுந்தவம் புரிந்தனர்.

இவ்வாறு அவர்கள் இருவரும் தவம் செய்துவரும்பொழுது, திருமாலின் வாகனமாகிய கருடனும், பிரம்மனின் வாகனமாகிய அன்னமும் சும்மாயிராமல், முருகனின் வாகனங்களான மயிலிடமும், சேவலிடமும், சென்று,- அன்பர்களே! உங்கள் பதவிக்கு ஆபத்து. அதனைப் பெற இரண்டு அரசகுமாரர்கள் கடுந்தவம் செய்கின்றனர் என்று கோள்மூட்டின.

மயிலும் சேலும் இதனைக் கேட்டு மிகவும் அஞ்சின. அரச குமாரர்கள் தவம் செய்யும் இடத்திற்கு வந்து அவர்களைத் தாக்கி அவர்களுடைய தவத்தைக் கெடுத்தன.

இளவரசர்கள் இதனால் வருத்தமுற்றனர்.தங்கள் தவம் கலையக் காரணமானவை அன்னமும் கருடனும் தான் என்று அறிந்தனர்.கோள்சொல்லியவர்களைக் கோள் சொல்லியே தண்டிக்க முடிவு செய்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு சமயம் தேவர்கள் யாவரும் சிவபெருமானை வணங்கக் கயிலை மலைக்கு வந்தனர். அவர்களுடைய வாக னங்கள் வெளியே நின்றிருந்தன. அப் போது அரச குமாரர்கள் மெல்லச் சென்று மயிலையும் சேவலையும் வணங்கினர்.

அவைகளை நோக்கி, உங்களுக்கு பலமே இல்லை என்று கருடனும்,எனது அழகு சேவலுக்கும் மயிலுக்கும் வருமா? என்று அன்னமும் உங்களைக் குறைத்துப் பேசுகின்றன என்று கூறி அவற்றின் மனத் தில் கோபக்கனலை மூட்டி விட்டனர். கோபம் கொண்ட மயிலும் சேவலும் தம்மை அவமதித்த கருடனையும் அன்னத் தையும் தேடிப் பிடித்துக் கொன்று விட் டன. இந்தச் செய்தியை அறிந்த திருமா லும் பிரமனும் முருகப்பெருமானைக் கண்டு வணங்கித் தமது வாகனங்கள் மாண்ட செய்தியைக் கூறி வருந்தினர்.

முருகன் அருள்கூர்ந்து அன்னத்தையும் கருடனையும் உயிர்ப்பித்து மீண்டும் அவர்க ளுக்குக் கொடுத்தார்.பின்னர் மயிலையும் சேவலையும் அழைத்து, நீங்கள் ஏன் அவற்றைக் கொன்றீர்கள்? என்று கேட்டார்

எங்களை,இழித்துப் பேசி இகழ்ந்த தால், அவற்றைக் கொன்றோம்' என்று மயிலும் சேவலும் கூறின. பின்னர். முருகன் அவற்றிடம் அன்னமும் கருடனும் உங்க ளிடம் நேராக வந்து அவ்வாறு சொல் லிற்றா? அல்லது வேறு யார் மூலமாகவாவது அதனை அறிந்தீர்களா? என்றார்.

இரண்டும் பெருமானை நோக்கி, 'ஐயனே! இரண்டு அரச குமாரர்கள் எங்களிடம் வந்து அச்செய்தியைத் தெரி வித்தனர். அதை உண்மை என்று நம்பி நாங்கள் போரிட்டோம் என்றன. முருகப் பெருமான், நீங்கள் ஆராயாமல் செய்த செயலால் உங்களைப் பதவியில் இருந்து நீக்குகிறேன்' என்றார்..

பின்னர் பெருமான் அரசகுமாரர்களை அழைத்து ஏன் கோள் மூட்டினீர்கள்? என்று வினவினார்.

அவர்கள் பெருமானைப் பலமுறை பணிந்து வணங்கி, ஐயனே! நாங்கள் மயி லாகவும் சேவலாகவும் மாறித் தங்களுக்குப் பணிபுரிய விரும்பினோம்.அதற்காக வேண் டிக் கடும் தவம் புரிந்தோம்.

தவம்கூடி வரும் வேளையில் அன்ன மும் கருடனும் கோள்மூட்டி மயிலையும் சேவலையும் ஏவி, எங்கள் கடுந்தவத்தைக் கெடுத்துப் பயனற்றதாக்கி விட்டன.ஆத லால் பழிக்குப் பழி வாங்கினோம் எம்மைப் பொறுத்தருள்க' என்றனர்.

பெருமான் அவர்களை நோக்கி, பணியாட்கள் தவறு செய்தால் அவர்களு டைய தலைவனிடத்தில் சொல்ல வேண்டு மேயன்றி தவறான பாதையில் சென்று அதற்கு வழிதேடக் கூடாது. பெருமைக் குரிய திருமாலும்பிரம்மனுமே உரிய வழி யில் என்னிடம் முறையிட்டபோது நீங்கள் ஏமாற்றி வஞ்சனை செய்தது அடாத செயல்.

நீங்கள் செய்த தவற்றுக்கு உரிய தண்ட னையாக அசுரர்களாவீர்' என்று சாப மிட் டார். அதைக்கேட்டு அரசகுமாரர்கள் அஞ்சி நடுங்கினர். பெருமானைப் பணிந்து, மன்னிக்கும்படி வேண்டினர்.

கருணை வள்ளலாகிய முருகப் பெரு மான் உங்களுடைய முன் செய்த தவத்திற்கு நான் மகிழ்ந்தேன். நமது சொற்படி நீங்கள் இருவரும் ஒரே உருவில் சூரபத்மன் என்ற அசுரனாவீர்! உமது சாபம் நிவர்த்தியாகும் வேளை வரும். அவ்வேளையில் உம்மை (சூரசங்காரம் முடிந்ததும்), சேவலாகவும் மயிலாகவும் ஏற்று அருள்பாலிப்போம் என்று வாக்களித்தார்.

அதன்படியே அவர்கள் சூரபத்மன் என்ற அசுரனாகி 108 யுகங்கள், 1008 அண் டங்களையும் ஆட்சிபுரிந்து இறுதியில் முருகன் வேலால் இரு கூறாகி மயிலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேவலும் ஆயினர். அவற்றை முருகப் பெருமான் வாகனமாகவும் கொடியாகவும் ஏற்றார்.

மயிலும் சேவலும் பதவிகளேஅதைப் பக்குவம் பெற்ற உயர்நிலை ஆன்மாக்கள் அடைகிறார்கள்.

அருணகிரிநாதர் மயில் தவம் செய்து, அப்பதத்தைப் பெற்றது என்பதனை,

பொற்பதம் இறைஞ்சிப் பரியாய பொற்சிகி''

என்று பாடுகின்றார். நாமும் கூட மயிலும் சேவலும் ஆகும் திறம்பட்டவர்களே.

திருப்புகழில் மயில்

அருணகிரிநாதர் திருப்புகழிலும், மற்றைய பிரபந்தங்களிலும் மயிலைத் தனிச் சிறப்புடன் பல அடைமொழிகள் கொடுத்துச் சிறப்பித்து மகிழ்கிறார். அவர் மயிலைக் குதிரையாகவும், தேராகவும், நாட்டிய தேவதையாகவும், அழகுக்கு அழகு சேர்க்கும் பொருளாகவும் பலவேறு உவமைகள் கொடுத்துச் சித்தரித்துப் போற்று வதைக் காண்கிறோம். சுவாமிகள் வயலூர் திருப்புகழில் பக்கரை விசித்ரமணி பொற்கலனை இட்டு நட பக்ஷி எனும் உக்ர துரகம் என்று மயிலைப் போற்றுகின்றார். பல வண்ணங்களில் ஒளிரும் விசித்திர மணிகள் பதிக்கப்பட்ட பொன்னாலான அணிகலன்களைப் பூண்டு நடமிடும் பறவையான மயில் கோபம் கொண்டு திமிரிப் பறக்கும் குதிரை போல் உள்ளது, என்பது இதன் பொருள். இதில் மயில் குதிரையாக உருவகம் செய்யப்பட்டிருக்கிறது.

யானைப் பாகனை மாவுத்தன் என்பர்.குதிரையை நடத்துபவன் ராவுத் தன் எனப்படுவான். அருணகிரி நாதர் செக்க மாமயில் ஏறும் ராவுத்தனே என்று குதிரையை நடத்துபவனாக முருகனைப் போற்றுகின்றார். மேலும், பச்சைப் புரவி, நடமிடு புரவி, சேணம் பூண்ட புரவி, தோகைப் புரவி என மயில் பல இடங்களில் குதிரையாகவே கூறுகிறார்.

குதிரைக்கு சேணமும் கடிவாளமும் இடுவர். முருகனின் மயில் நாகங்களைக் கடிவாள மாகவும்,ரத்தினத்தாலான சேணத்தையும் கொண்டிருக் கிறது. பழனியில் உள்ள மயில்களில் அழகிய கடிவாளங்களும் சேணமும் சித்தரிக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

சித்திரக் கலாபத் தனிமயூரத்தனே என்பார். இதில் சித்திர விசித்திர வேலைப்பாடுகளுடன் வண்ணம் பொலியத் தோன்றும் மயில் என்று அதன் மிளிரும் பொன்னுடல் விவரிக்கப்படுகிறது. இதன் அழகைக் கண்டு உலகத்திலுள்ள அழகெல்லாம் திரண்டு வந்து அதை சரண் அடைந்ததாம் அதனால் அழகு சரண்மயில் என்றும் கூறுகின்றார்.

அழகு மட்டுமா பணிகிறது. அழகின் வடிவமான சந்திரன் பணிகிறான் (ருணா சரண் மயில்) மேலும், சந்திர சூரியர்க்குப் பகைவனாக ராகு, கேது முதலிய பாம்புகளும், அதன் இனங்களும் பணிந்து வணங்குகின்றன (பனி பத .மயில்) சுவாமிகள் மயிலைத் தேர் என்று உவமிக்கிறார். கந்தர் அலகாரத்தில் கலாபத்தேர் மாமிசை வந்து எதிரப்படுவாய் என்று பாடுகிறார்.

மயிலின் நடனம் திருப்புகழில் அனேக இடங்களில் கூறப்பட்டுள்ளது. மயிலை நாட்டிய மயில் என்றும் நர்த்தனப் புரவியென் றும், ஆடு மயில் என்றும் கூத்தாடும் பெரும் பொருள் என்றும், குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதன் ஆட்டத்தைக் கண்டு அம்பிகை மகிழ்கிறாள் .அம்மயில் தில்லை நடராசப் பெருமான் மனம் மகிழ நடனமாடுகிறது. அவருடைய ஆட்டத் திற்கு மேலான ஆடல்களையும் அது புரிகின்றது. இன்னும் பலவகைகளில் திருப்புகழ் மயிலின் அளவுகடந்த பெருமைகளைத்தனித் தன்மையுடன் போற்று கிறது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயில் வாகனம்

முருகன் ஆலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாக்களில் முருகப்பெருமான் பல்வேறு வாகனங்களில் பவனி வருகின்றான். புராணங்களின்படி முருகப்பெருமானுக்கு முதலில் வாகனமாகும் பேறுபெற்றது ஆடு. பிறகு குதிரை, யானை ஆகியவற்றையும் அவர் வாகனமாக ஏற்றுக் கொண்டார்.

சூரனுடன் நடந்த போர்க்களத்தில் இந்திரன் மயில் வடிவம் கொண்டு முருகனைத் தாங்கினான். போரின் இறுதியில்முருகன் மாமரமாக நின்ற சூரனை இரண்டாகப் பிளந்தார். அவை மயிலாகவும் சேவற் கொடியாகவும் ஆயின. அவற்றை முருகன் ஏற்றுக் கொண்டான். அதுமுதல் அவனுக்கு நிலைத்த வாகனமாக மயில் இருந்து வருகிறது.

வள்ளி தெய்வயானையுடன் முருகப்பெருமான் மயில் வாகனத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் விழா " மயூர வாகன சேவை" என்று சிறப்புடன் போற்றப்படுகிறது .

ஆலயங்களில் மரத்தால் செய்து பல்வேறு வண்ணங்கள் தீட்டப்பெற்ற மயில் வாகனங்கள் உள்ளன. பெரிய ஆலயங்களில் வெள்ளி, தங்கத்தகடு போர்த்தப்பட்டு கலையழகுடன் விளங்கும் மயில் வாகனங்கள் உள்ளன. சென்னை கந்தகோட்டத்திலுள்ள தங்க மயில் வாகனம் சிறந்த கலைப் படைப்பாகத் திகழ்கிறது.

முருகனுக்கு மயில்வாகனம் அமைந்திருப்பது போலவே அவருடன் தனித்தனியே எழுந்தருளும் வள்ளி, தெய்வயானை ஆகிய தேவியரும் மயில் வாகனங்களில் வலம் வருகின்றனர். இப்பகுதியில் மந்திரங்கள், பிரணவம் முதலானவை மயிலாகி விளங்கு முருகனைச் சுமக்கும் செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

1. மந்திர மயில்

சுப்பிரமணியப் பெருமான் மந்திரங்களின் நாயகன், மந்திரங்களின் வடிவானவன். எனவே, அவன் ஏறிவரும் மயிலும் மந்திரங்களின் ஆதாரமான பிரணவத்தின் வடிவமாக விளங்குகிறது. மயில் தோகையை விரித்து நிற்பது ஓங்காரமாகத் தோன்றுகின்றது. அதன் மீது மந்திர ரகசியங்களின் தலைவனாகக் குகன் எழுந்தருள்கின்றான். இந்நிலையில் அவன் பாலகனாகக் (இளையவனாக) காட்சியளிக்கிறான். அருணகிரி நாதர் ஆன தனிமந்திர ரூப மயில் என்று மயிலை மந்திரத்தின் வடிவமாகப் போற்றுகின்றார்.

இக்காட்சியே குக ரகசியம், தகராலய ரகசியம் எனப்படும். பாம்பன் சுவாமிகளுக்கு இந்தக் கோலத் தில் அவன் காட்சியளித்தான். இவ்வடிவம் தவத்திரு சுவாமிகளாலும் அவருடைய அன்பர்களாலும் தனிச் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. மேலும் பலவகையாக மந்திர மயில் திகழ்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டாவது நிலையில் விரித்த தோகையினையுடைய மயிலின்மீது முருகப் பெருமான் வள்ளி,தெய்வயானை நாயகியருடன் எழுந்தருள்கின்றான்.

மூன்றாவது வகையில் விரித்த தோகையை உடைய மயில் மீது ஆறுமுகனாக பெருமான் வள்ளி தெய்வயானை நாயகியருடன் எழுந்தருள்வதாகும். இதுவே மிகச்சக்தி வாய்ந்த முருகனின் திருவுருவமாகக் கொள்ளப்படுகிறது.இதை வழிபடுவதற்கு மிகுந்த சீலமும் பயபக்தியும் வேண்டுமென்பதால், இத்தகைய திருவுருவங்களை வழிபடுவோரும் மிகக் குறைவே.

ஆலயங்களின் முகப்பில் இத்தகைய சுதை வடிவங்களை அமைக்கும் வழக்கம் இருந்தது. பின்னாளில் அதுவும் கைவிடப்பட்டு, முருகனை மயில் மீது அமைத்து, இருபெரும் தேவியரை இருபுறமும் நிற்கும் படியாக அமைக்கின்றனர்.

அச்சகங்கள் வண்ணப்படங்களை அச்சி டத் தொடங்கிய காலங்களில் மந்திர மயிலில் ஆறுமுகன் இருபெரும் தேவியருடன் காட்சிய ளிக்கும் வண்ணப்படங்கள் அச்சிடப்பட்டன. பின்னாளில் அத்தகைய வழக்கம் ஏனோ கைவிடப்பட்டுவிட்டது.

இப்படங்களிலும் மயிலின் தலை வள்ளியம்மையை நோக்கியிருப்பது மோட்ச சாதனங்களைக் கொடுக்கும் என்றும், தெய்வயானையை நோக்கியிருப்பது சுக போகங்களை அளிக்கும் என்றும், நேராக இருப்பது இகபரசுகங்களை அளிப்ப தென்றும் கூறுவர்.

௨. மணி மயில்

மணி என்பது ரச மணியையும் உடலில்பட்ட அளவில் நோய் தீர்க்கும் ஔஷத மணி யையும் குறிக்கின்றது. மணி நாதம்என்றும் பொருள்படும்.நாதமய மான ஓசையினைக் வகைப்படுத்தி அதன் மூலம் பல செயலைச் செய்யும் முறைகளை விளக்கும் நிகழ்ச்சியைப் பரிபாஷைச் சொல்லால் மணி எனக் குறித்தனர் என்பர். மணிமயிலை **நாதமயில்** எனவும் அழைப்பர்.

இந்த மயில் பார்வைக்குக் கிட்டாத மயில். மந்திர உபதேசத்தின்போது முருகன் இந்த மயில் மீதிருந்து உபதேசம் செய்கிறான்.இம்மூர்த்தியை தியானிப்பது மட்டுமே வழக்கம்.சிலையாக அமைப்பதில்லை

௩. சக்தி மயில்

மற்றுமோர் வகையில் மணி என்பது மனோன்மணியாகிய பராசக்தியைக் குறிக்கும். பராசக்தியே மயில் வடிவம் தாங்கிக் குமாரனுடன் ஆடி மகிழ்கின்றாள்.மயிலாகி இறைவனை பூசிப்பதும், குமர னோடு விளை யாடுவதும் அன்னையின் கருணையைக் குறிக்கும்.இதனால் இறைவிக்கு மயிலம்மை என்பதுபெயராயிற்று. இம் மயில் முருகனை விடச் சற்றுப் பெரியதாக விளங்க, முருகன் இளையவனாக அருகில் இருந்து அதனை ஆரத்தழுவி மகிழ்வான்.

௪. ஔஷத மயில்

ஔஷதம் என்பதற்கு நோய்களைத் தீர்க்கும் மருந்து என்பது பொருள். மயில் தோகையை மருந்தாக நாட்டுப்புற வைத்தியர்கள் பயன்படுத்துவதை இப்போதும் காணலாம்.

நாம் இங்கு சொல்லப் போவது பிறவிப் பிணியாகிய நோயைத் தீர்க்கும் மயிலாகும். பவ ரோக வைத்திய நாதனாகிய முருகப்பெருமான் இம்மயில் மீது அருவமாக எழுந்தருள்கின்றான். அவன் இருப்பதைக் குறிக்க வேல் மட்டுமே விளங்கும்.

தவத்திரு பாம்பன் சுவாமிகளுக்கு விபத்து ஏற்பட்டு மருத்துவ மனையில் தங்கியிருந்த போது, மயிலும் வேலும் தோன்றி அந்நோயை நீக்கியது இங்கு எண்ணத்தக்கதாகும். அந்த நிகழ்ச்சியை அவர் ' அசோக சாலவாசம்" எனும் நூலில் விவரித்துள்ளார். அவருக்கு இரண்டு பொன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயில்கள் காட்சியளித்ததாகக் கூறப்படுகிறது.

பல அடியார்களின் வாழ்வில் மயில் தன் தோகையால் வீசுவது போன்ற தோற்றங்கள் ஏற்பட்ட பிறகு அவர்களுடைய நோய் தீர்ந்த வரலாறுகள் உள்ளன.

எனவே, இந்த மயில் ஔஷத மயில் எனப்பட்டது. இதில் முருகன் அருவமாக எழுந்தருளியிருப்பதால், மயில் மீது அவனுடைய சக்திவேல் மட்டுமே தோன்றும்.

5. இந்திர மயில்

சூரனுடன் முருகன் போர் நிகழ்த்திய போது, சூரன் அவருடைய ஆற்றலுக்கு எதிர்த்து நிற்க முடியாமல் சக்ரவாகப் பட்சியாக உருவமெடுத்து ஓடினான். அவனைத் துரத்திச் செல்ல முருகன் எண்ணியபோது, இந்திரன் அழகிய மயிலாகி, அவரைத் தாங்கினான். முருகன் அதன் மீது ஏறி அசுரனைத் தொடர்ந்து சென்று வென்றார். இவ்வாறு அமைந்த மயில் இந்திர மயில் எனப்படும்.

6. அசுர மயில்

முருகனிடம் பலவாறு போரிட்டு ஒய்ந்த சூரபத்மன், இறுதியில் கடலின் நடுவில் ஒரு மாமரமாகி நின்றான். அம் மரத்தை முருகன் தன் வடிவேலாயுதத்தால் இரண்டு கூறாகப் பிளந்தான். அவற்றுள் ஒன்று மயிலாகவும் மற்றது சேவலாகவும் மாறின.

பின்னர், மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் ஏற்றான். அன்று முதல் சூரனே மயிலாகிப் பெருமானைத் தாங்குவதாக ஐதிகம். இந்த வகை மயில் அசுர மயில் எனப்படும்.

7. ஆன்ம மயில்

சிவாலயங்களில் கருவறைக்கு நேரே கொடி மரத்தினையொட்டி அமையும் நந்தியை "ஆன்ம நந்தி" என்பது போலவே முருகனின் ஆலயங்களில் கொடிமரத்திற்கு அருகே அமையும் மயிலை "ஆன்மமயில்" என்கின்றனர்.

பக்தர்களின் ஆன்மா மயிலாகச் சித்திரிக்கப்படுகிறது. முருகன் எனும் கருணை மழை பொழிவது கண்டு ஆன்மா மயிலாகி நடமிடுகிறது.

புற அழகு நான் என்னும் கர்வத்தாலும் குலச்செருக்கு, கல்விச் செருக்கு என்னும் செருக்குகளாலும் களித்திருக்கின்ற ஆன்மா, இறைவனை உணர்ந்த பின்னர் அடங்கி ஒடுங்கி நிற்பதையே இம்மயில் சுட்டுகிறது. (விரிவை மயில் மண்டபம் தலைப்பில் காண்க.)

8. வேதமயில்

(கணேசர் முருகனுக்குத் ஈந்த மயில்)

சிவபெருமானுக்கு வேதம் எவ்வாறு விடைவாகனமாக இருக்கின்றதோ அவ்வாறே முருகனுக்கும் வேதம் மயிலாகத் திகழ்கிறது. மேலும், விநாயகப் பெருமானுக்காக வேத வேள்வியில் இருந்து வெளிப்பட்ட மயில், பின்னாளில் முருகனுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரால் தரப்பட்டதை. விநாயக புராணத் தால் அறிய முடிகிறது.

ஒரு கல்பத்தில் கமலாசுரன்,சங்காசுரன் என்பவர்கள் வாழ்ந்து வந்தனர்.கமலாசுரன் ஆணைப்படி சங்காசுரன் பிரம்ம தேவனிட மிருந்து படைப்புத் தொழிலுக்கு மூலகார ணமான வேதத்தைப் பிடுங்கிக் கொண்டு கடலில் ஒளிந்து கொண்டான்.அனைவரும் விநாயகரைச் சரணடைந்தனர். விநாயகர் வேதத்தை மீண்டும் படைத்து அவனுக்கு அளித்ததுடன் படைப்புத்தொழிலைத் தொடர்ந்து செய்ய அருள்பாலித்தார்.

இதையறிந்த கமலாசுரன் விநாயகர் மீது படை யெடுத்து வந்தான். அதனை அறிந்த கார்க்கியர் என்ற முனிவர் ஒரு வேள்வி இயற்றினார்.

அதிலிருந்து ஓர் அழகிய பொன் மயில் தோன்றியது அதனை அவர் விநாயகருக்கு வாகனமாக அளித்தார். விநாயகர் அதன் மீதேறிச் சென்று கமலாசுரனைக் கொன் றார். அதன் பின் அந்த மயில் வாகனத்தைத் தன் தம்பிக்கு அளித்தார் என்று விநாயக புராணம் கூறுகிறது. வேத வேள்வியில் இருந்து தோன்றியதால் இதற்கு வேதமயில் என்பது பெயராயிற்று

இப்படி புராணங்களில் பல்வேறு மயில்கள் முருகனுக்கு வாகனமாகக் கூறப் பட்டுள்ளன.

பகை கடிதல்

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் மயில் வாகனத்திடம் அதன் சிறப்புகளைக் கூறிப் போற்றி உனது இறைவனாகிய முருகப்பெருமானை என் முன்னே கொண்டு வந்து சேர்ப்பாயாக என்று வேண்டும் வகையில் இந்நூலை அருளிச் செய்துள்ளார். இதிலுள்ள பாடல்கள் அனைத்தின் இறுதியிலும் எனது எதிரே உன் இறைவனைக் கொண்டு வருக என்ற வேண்டுதல் அமைந்துள்ளது.

திருவண்ணாமலையில் அருணகிரிநாதப் பெருமான் முருகனைக் கம்பத்தில் தோன்றும்படி வேண்டும் வேளையில் மயிலைப் போற்றி அவனை அழைத்து வருமாறு பாடிய வரலாறும் இங்கே நினையத் தக்கதாகும். மயில் வாகனமே இறைவனை பக்தனிடம் கொண்டு வந்து சேர்ப்பதாக பெரியோர் கூறுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயிலார்

மயிலார் என்பது தமிழகத்தில் உள்ள சில குடும்பங்களில் கொண்டாடப்படும் நோன்பு. காணும் பொங்கல் கழிந்ததும் ஆறாம் நாளில் அல்லது எட்டாம் நாளில் இது கொண்டாடப்படுகிறது. இதனைச் செங்குந்தர்கள் (கைக்கோளர்) சிறப்பாகவும் சலவையாளர் முதலியோர் சிறு அளவிலும் கொண்டாடி வருகின்றனர்.

இந்நாளில் நடுவீடு எனப்படும் பூசை மாடத்தின் சுவரில் பச்சிலைகளைத் தேய்த்து அதன்மீது விரித்த தோகை உடைய அழகிய மயிலின் படத்தை வரைந்து அதற்கு மஞ்சள் குங்குமம் இடுவர்.



சில சமயம் அதன் மீது குறுக்குவாட்டில் வேலாயுதத்தையும் வரைவர்.

உச்சிவேளையில்வடை, கொழுக்கட்டை, சுண்டல் ஆகியவற்றைப் படைப்பர். அச்சமயம் சோற்றால் சிறு உருண்டைகள் செய்வர். மூன்று மயில் இறகுகளை அதில் வைத்து உருட்டுவர். ஆறு அல்லது பன்னிரண்டு உருண்டைகளைச் செய்து இலையில் வைத்து தூப தீபம் காட்டுவர். பின்னர் அச்சோற்று உருண்டைகளை அப்படியே விழுங்கிவிடுவர். இது நோய் நொடிகளையும், உடல் தளர்ச்சியையும் நீக்கும் என்று நம்புகின்றனர். இதனை மயில்புடி என்பர்.

தைப் பொங்கலையொட்டி நெசவுத் தொழிலுக்கு விடுமுறை கொடுக்கும் இவர்கள் மயிலாருக்குப் பின்னரே தொழிலைத் தொடங்குவது வழக்கம்.

சலவையாளர்கள் மயிலார் அன்று துணி வெளுக்கும் சாலையும் அடுப்பையும் வணங்குவர். சாலில் மயில் படம் வரைந்து வணங்குவதும் உண்டு. அவர்களும் பொங்கலையடுத்து வரும் மயிலாருக்குப் பின்னரே தமது தொழிலைத் தொடங்குவது மரபு. இந்த நாளில் மொச்சைக் கொட்டையைச் சுண்டலாக்கிப் படைப்பது வழக்கம். இது குறித்த நாட்டுப்புறப்பாடல் ஒன்றும் உள்ளது. இது மயில் பண்டிகை என்றும் அழைக்கப்படும்.

மயிலாடுஞ்செடிகள்

மதுரை மாவட்டம் கழுகுமலையில் முருகன் சந்நிதி சிறப்புடன் அமைந்துள்ளது. இம்மலையில் மயிலாடுஞ்செடிகள் எனும் ஒருவகைச் செடிகள் காணப்படுகின்றன.

திருமயிலாடி

முருகப் பெருமான் மயிலை ஆடிக்களிப்பிக்கச் செய்த இடம் திருமயிலாடி என்றழைக்கப்படுகிறது. இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் அமைந்துள்ள திருப்புகழ்த் தலமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயிலேறும் மாணிக்கம் (சிகி வாகனர்)

இறைவனை அவனுடைய வாகனத்துடன் இணைத்துப் பெயரிட்டு அழைப்பதும் ஒரு மரபு. இடப (நந்தி) வாகனத்தையுடைய சிவபெருமானை, "இடபாரூடர்' என்றும், கருடவாகனத்தையுடைய திருமாலைக் கருடாரூடன்' என்றும், சிங்க வாகனத்தையுடைய காளியை "சிம்ம வாஹினிஎன்றும், கலைமானை வாகனமாகக் கூடிய துர்க்கையைப் பாய்கலைப் பாவை' ' என்றும் அழைப்பது போலவே முருகப்பெருமானையும் வாகனத்துடன் சேர்த்து மயிலேறும் மாணிக்கம் என அழைக்கின்றனர்.

இம்மூர்த்தியை, தணிகைப் புராணம் மயிலூர்திக் கோமான் என்று குறிப்பிடுகின்றது. இந்த மூர்த்தி மயில் வாகனத்தில் நான்கு கரங்களுடன் வலது இரண்டு கரங்களில் வேலும் அபயமும் இடது இரண்டு கரங்களில் வரதமும் குலிசமும் உடையவராகக் காட்சியளிக்கிறார்.

புலிங்கம் கதிப்பத் தீத்தும்மும்
பெருவேல் அபயம் வலத்திருக்கைத்
தலங்கொண்டு இடப்பால் இருகரத்தும்
தக்க வரதம் வச்சிரமும்
இலங்க அணிந்து திரைகடலும்
எழுபல்வரையும் உலகனைத்தும்
குலுங்கக் கடவு மயிலூர்திக் கோமான்
உருவம் இயற்றுனரும்.

எனவரும் தணிகைப்புராணம் - அகத்தியப் படலம் 79வது பாடலால் இதை அறியலாம்.

குமார தந்திரம் இம்மூர்த்தியைச் சிகி வாகனர் என்று குறிக்கின்றது. (சிகி- மயில் .இவரை நான்கு கரங்களுடன் வஜ்ரம், சக்தி, ஏந்தி அபய,வரத முத்திரை தரித்து மயில்மீது வீற்றிருப்பவராகவும், ஆறு முகங்களுடன் பன்னிரண்டு திருக்கரங்கள் கொண்டவராகவும் சுட்டுகிறது. மேலும், ஏழுவிதங்களில் இம்மூர்த்தியை அமைக்கலாம் என்று சிற்பநூல்கள் கூறுகின்றன. (அதனைக் குமரனின் கோலங்கள் எனும் பகுதியில் காணலாம்)

ஸ்ரீ தத்துவநிதி என்று நூலில் சிகிவாகனர் (மயில்வாகனர்) சிறப்புடன் குறிக்கப்படுகின்றார்.அதன்படி அவர் ஒரு முகமும் மூன்று கண்களும் நான்கு கரங்களில் பாசம், அங்குசம், அபய, வரத முத்திரைகள் தரித்தவராய்த் தாமரை மலர் மேனி கொண்டவராய் இந்திர நீலமயில் மீதேறி உலகினை வலம் வருபவராக விளங்குகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதுவாகச் சிவாலயங்களில் சக்தி, குலிசம், அபய, வரத முத்திரை தரித்தவராக முருகன் மயில்மீது விளங்கக் காண்கிறோம்.

சென்னை சைதாப்பேட்டை செங்குந்த கோட்டத்தில் அழகிய சிகிவாகனர் திருவுருவம் உள்ளது. நடைமுறையில் இவரைப் பாலசுப்ரமணியர் என்று அழைக்கின்றனர்.

முருகனின் திருக்கோலங்கள் பெரும்பாலானவற்றில் அவர் மயிலுடன் அமைக்கப்பட்டிருக்கிறார் என்றாலும், இங்கு மயிலைச் சிறப்பிக்கும் வகையில் இப்பெயர் பூண்டுள்ளார்.

கழுகுமலையில்மூலத்தானத்தில் பெருமான் மயிலேறும் மாணிக்கமாக விளங்குகிறார். இவர் வழக்கமான நான்கு கரங்களுடன் கத்தி, கேடயம் ஏந்திய இரு கரங்களையும் கொண்டு ஆறு திருக்கரங்களுடன் காட்சியளிக்கிறார்.

மயில் மீது நடனம்

தெய்வங்கள் தத்தம் வாகனங்களின் மீது நின்று நடனமாடுகின்றன. சிவபெருமான் இடபத்தின் மீது நின்று நடனமாடுகின்றார். அது இடப நடனம் எனப்படுகிறது. சிவபெருமான் இடபத்தின் நடனமாடும் அற்புதத் திருவுருவம் சிதம்பரத்தையடுத்த மேலைக்கடம் பூரில் உள்ளது,

திருமால் தமது படுக்கையான ஆதிசேடனுக்கு இணையான காளிங்கன் என்ற பாம்பின் மீது நடனமாடுகிறான். அவனைக் காளிங்க நர்த்தனன் என்று போற்றுகின்றோம்.

விநாயகர் பெருச்சாளி மீது நர்த்தன விநாயகராகக் காட்சி அளிக்கின்றார்.

மயில் ஆட அதன்மீது முருகப்பெருமான் நடனமாடும் காட்சி திருப்புகழில் அநேக இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

வேட மயிலான வள்ளியம்மையும் வேழ மயிலான தெய்வயானைப்பிராட்டியும் கண்டு மகிழ, முருகப்பெருமான் பொன் மயில் மீது நடனமாடும் காட்சியைப் பல சிற்பிகள் அமைத்துள்ளனர். அதை அடியொற்றி வரைந்த கோட்டுருவத்தை இங்கு காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோலக் குறத்தியுடன் ஞானமயில் மீது வரும் குமரகுருபரன்

சிவபெருமான் அன்பர்களுக்கு அருள்புரிய விடைமீது உமையுடன் வந்து அருள்புரிவதாகப் புராணங்கள் கூறுகின்றன. அதையொட்டிச் சிவாலயங்களில் நடைபெறும் ரிஷப வாகனக் காட்சி தனிச் சிறப்புடன் போற்றப்படுகின்றது. அதுபோல முருகன் ஆலயங்களில் மயில்வாகன சேவை சிறப்புடன் போற்றப்படுகின்றது. அந்த வேளையில் முருகன் இருபெரும்தேவியருடன் மயில்மீது வந்து அருள்பாலிக்கின்றான்

இதுபோன்று (தெய்வயானையின்றி) முருகனும் வள்ளியும் மட்டும் மயில் மீது வரும் காட்சியும் தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றது. இரண்டு நிகழ்வுகளில் முருகன் மயில்மீது கோலக்குற வள்ளியுடன் பவனி வருவது அன்பர்களால் கொண்டாடப்படுகிறது.

முதல் நிகழ்வில், தினைப்புனத்தில் வள்ளியை களவு மணம் புரிநது கொண்ட முருகப்பெருமான் அவளை மயில் மீது அமர்த்திக் கொண்டு வந்தான். அதுவே மயில் மீது வள்ளியுடன் முருகன் ஏறி வந்த முதல் திருக்கோலமாகும்.

இரண்டாவது வகையில் அன்பர்களுக்கு ஞானத்தை அருள கோலக் குறத்தியுடன் வருவதாகவே கூறுவர்.

நீலச்சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும்
கோலக்குறத்தியுடன் வருவான் குருநாதன்

என்று அருணகிரிநாதர் பாடுகின்றார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் ஞான மலை என்னும் அருணகிரிநாதரின் திருப்புகழ் பெற்றதலம் உள்ளது. இத்தலத்தில் அருணகிரிநாதருக்கு முருகன் கோலக் குற வள்ளியுடன் மயில்மீது வந்து காட்சியளித்து ஞானஉபதேசம் செய்தார். அதை நினைவூட்டும் வகையில் இத்திருக்கோயிலில் குறமகள் தழுவிய குமரனின் உலாத்திருமேனியாக எழுந்தருளு விக்கப்பட்டுள்ளது. இதில் மயில்மீது சத்தியாயுதமும் கோழிக் கொடியும் மேற்கரங்களில் விளங்க முன் வலது கரம் அபயமுத்திரை காட்ட இடது கரம், மடிமீது அமர்ந்திருக்கும் வள்ளியம்மையைத் தழுவ மயில்மீது முருகன் வீற்றிருக்கிறார் உள்ளது. வள்ளி இடதுகரத்தில் மலரேந்தி வலக்கரத்தால் முருகனைத் தழுவிக் கொண்டு அவனது புன்முறுவல் பூக்கும் இன்முகத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றாள். அருணகிரிநாதர் இத்தலத்தில் அருளியுள்ள திருப்புகழில் நாரணசுவாமி ஈனு மகளொடு ஞானமலை மேவு பெருமாளே என்று துதிக்கிறார். (நாரணசுவாமி ஈனுமகள்(வள்ளி யம்மை).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருணகிரி நாதரும் அழகு மயிலும்

அருணகிரிநாத சுவாமிகளின் முருக னைப் புகழ்ந்ததைப் போலவே அவனு டைய மயிலையும் அவன் திருக்கை அயிலை யும் சிறப்புடன் பாடி மகிழ்கின்றார். அவ ரால் மயிலுக்கு அளிக்கப்பட்டுள்ள அடை மொழிகள் ஏராளமாகும். மயிலின் பெரு மையை விளக்கத் தனியே மயில் வகுப்பு என்ற நெடும்பாட்டையும், மயில் விருத்தம் என்னும் பதினோரு பாடல்களையும் அருளிச் செய்துள்ளார்.

அவர்முருகனை அழைக்கும் போதெல் லாம் மயிலையும் உடன் அழைத்துப் பரவு வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். எடுத்துக்காட்டாக,

அழகான செம்பொன் மயில்
மேல் அமர்ந்து......
அலைவா யுகந்த பெருமானே
பச்சைப்புயல் மெச்சத்தகு பொருள் -
பக்ஷத்தொடு ரட்சித்தருள்வதும் ஒரு நாளே

எனவரும்பாடற்பகுதிகளைக் கூறலாம்.

மேலும் மயில்ஆடும் நளின அசை வுகளுக்கு ஏற்ப, சொற்கட்டுப் (ஜதிகள்) பாடல்கள் பலவற்றையும் பாடியுள்ளார்.

இவை யாவற்றிற்கும் மேலாக, மயில் அருணகிரிநாருக்குச் செய்த அருளை இனிக் காணலாம்.

பல தலங்களுக்குச் சென்று வழிபட்ட பின்அருணகிரிநாதர் திருவண் ணாமலை க்கு வந்து உண்ணாமுலை அம்பிகையை உடனாய அண்ணாமலை யாரை வணங்கி மகிழ்ந்திருந்தார். அந்நாளில் சம்பந்தாண் டான் என்ற காளி உபாசகன் திருவண்ணா மலையில் வசித்து வந்தான். அவன் மிகுந்த கர்வம் படைத்தவனாகவும், அரசியல் செல்வாக்கு பெற்றவனாகவும் விளங்கி னான்.

அரசனுக்கு மிகவும் நெருக்கமான வனாக இருந்ததால்,எல்லோரும் அவனைக் கண்டுஅஞ்சினர்.ஒரு சமயம் அவன் அருண கிரிநாதர் இருந்த தெருவின் வழியே பல்லக் கில் மிகுந்த ஆடம்பரத்துடன் சென்று கொண்டிருந்தான்.

அவனுடைய காவலர்கள் அவனைவிட அடாவடிக்காரர்களாக இருந்தனர். அவர் கள் அருணகிரிநாதரை ஒருபுறமாகத் தள்ளி விட்டுச் சென்றனர். அருணகிரிநாதர் அருகில் உள்ளவர்களிடம் அவன் யார் என்று விசாரித்தார்.

அங்குக் கூடியிருந்தவர்கள் அவனு டைய அகங்கார அலட்சியப் போக்கையும், அரசனிடம் அவனுக்குள்ள செல்வாக்கை யும் மந்திர, தந்திர ஆற்றலையும் எடுத்துக் கூறியதுடன், அவனால் ஏற்படும் இன்னல் களையும் விரிவாகக் கூறினர்.

அதைக் கேட்ட கருணை மனத்தின ரான அருணகிரிப் பெருமான் அவனை அடக்க எண்ணினார். உடனே அவன் பல்லக்கு முறிந்து விழும்படியாகப் பாடல் ஒன்றைப் பாடினார். அப்பாடல் முடியு முன்பே அவன் ஏறி வந்த பல்லக்கு முறிய, அவன் குப்புற வீழ்ந்தான். அங்கு நடந்த தை ஒருவாறு யூகித்து அஞ்சி அவ்விடம் விட்டுச் சென்றான்.

ஆனால், அவன் நெஞ்சில் பகைமை உணர்ச்சி தோன்றியது. அவன் அரசனிடம் சென்று, அரசே இன்று நான் ஆலயத்தை வலம் வரும்போது அருணகிரிநாதர் என்பவரைக் கண்டேன். நீ அவரை அழைத்து வந்து அவருடைய ஆற்றலைச் சோதிப் பாய் என்றான்.

அரசன் அருணகிரிநாதரின் புகழையும் அவருடைய திருப்புகழ்ப் பாடலையும்பற்றி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



முன்பே கேள்விப்பட்டிருந்தான். எனவே, அவனுக்கும் அவரைக் காண வேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. ஏவலர்களை அனுப்பி அவரை அழைத்து வரும்படி அனுப்பினான். அருண கிரிநாதர் அரசனின் அழைப்பைக் கேட்டதும், சம்பந்தாண் டான் தான் ஏதோ சூது செய்கிறான். அவனுக்குச் சரியான பாடம் புகட்டுவோம் என்று கருதி அப்போதே அரசவைக்கு வந்தார். அரசன் அவருக்கு உரிய ஆசனம் தந்து அமரச் செய்தான்.

பின்னர் சம்பந்தாண்டானும் அரசனும் மாறிமாறிக் கேள்விகள் கேட்க, அருண கிரிநாதர் அவற்றிற்குரிய பதில்களைக் கூறினார். சம்பந்தாண்டான், அரசனிடம் அருணகிரிநாதர் முருகன் அருள்பெற்றவர் என்பது உண்மையானால் அவரிடம் முருகனை வரவழைத்துக் காட்டும்படிக் கேளுங்கள் என்றான்.

அரசனும் அவரிடம் முருகனை வரவ ழைத்துக் காட்ட முடியுமா? என்று கேட்டான். அவனுடைய மனதில் நாம் கடவுளைக் காணும் உரிய தவங்களைச் செய்யவில்லை. இந்த வகையிலாவது முருகனைப் பார்க்கலாமே என்ற ஆவல் எழுந்தது.

அருணகிரிநாதர் தனக்குள் சம்பந் தாண்டான் நம்மைச் சிக்கலில் ஆழ்த்த இவ்வாறு தூண்டியுள்ளான். இதுவும் முருகன் திருவிளையாடல் போலும் என்று எண்ணிக் கொண்டார். முருகனைத் துதித்து அரசனை நோக்கி, நான் முருகப் பெருமானை அழைத்து யாவரும் காணக் காட்சி கொடுக்க வைக்கின்றேன் என்றார்.

பின்னர் அரசனை நோக்கி " என்னைப் போலவே உமது அரசவை வித்தகர் சம்பந்தாண்டான் தமது உபாசனா தெய்வ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாகிய காளிதேவியை வரவழைத்துக் காட்டு வாரா?" என்று கேட்டார்

சம்பந்தாண்டானுக்கு அச்சம் தோன்றியது. காளியை நாம் பல ஆண்டுகாலம் தவம் செய்தல்லவா? வசியம் செய்துள்ளோம். அவள் வந்து யாவருக்கும் முன்னே காட்சி கொடுப்பாளா? நாம் அருணகிரிநாதரை மாட்டி வைக்க முயன்றதில் அவர் நமக்கு இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கி விட்டாரே என்று கலங்கினான். அதை வெளிப்படுத்தாமல், "அவர் முருகனைக் காட்டினால் நானும் காளியைக் காட்டு கிறேன் என்று தட்டுத்தடுமாறிச் சொன்னான்.

அருணகிரிநாதர் அவனிடம் இப்போட்டியில் வெற்றி பெற்றவருக்குத் தோற்றவர் அடிமையாக வேண்டும் என்றார். இதைக் கேட்ட சம்பந்தாண்டான் உள்ளத்தில் நடுங்கினாலும் அதை வெளிக்காட்டாமல் சம்மதம் என்றான்.

அரசனுக்கு முருகனையும் காளியையும் ஒருசேரக் காணப் போகிறோம் என்பதில் மகிழ்ச்சி உண்டாயிற்று. இருவரும் தத்தம் கடவுளைக் காட்ட வேண்டிய போட்டி நாளையும் தேர்ந்தெடுத்து அறிவித்தான்.

அருணகிரிநாதர் அரசனிடம் விடை பெற்றுக் கொண்டு அண்ணாமலையார் ஆலயத்திற்கு வந்து பெருமானைத் தரிசித்தபின் அன்பர் குழாத்துடன் திருமடத்திற்கு எழுந்தருளினார்.

அன்றிரவு சம்பந்தாண்டான் தன் மனையில் மிகப் பெரிய வேள்வியைச் செய்தான். அவனுக்கு நீண்ட நேரம் தேவிகாட்சியளிக்கவில்லை. அழுதுதொழுது உருகினான். இறுதியில் காளிதேவி தோன்றினாள். அவளை வணங்கிஅரசவையில் நடந்ததைக் கூறி, பக்தர்கள் முன்னிலையில் தோன்றிக் காட்சியளிக்குமாறு வேண்டி னான்.

அதைக் கேட்ட காளிதேவி கடுங் கோபம் கொண்டாள். பக்தனே! நீ செய்த கடுந்தவத்தின் பயனாக உனக்குக் காட்சியளித்து அருள் புரிந்தேன். ஆனால் உனது தீச்செயலுக்கு என் சக்தியைப் பயன்படுத்தி அதனை விரயம் செய்து கொண்டாய்.

ஆரம்பத்திலேயே உனக்குப் பன்னிரண்டாண்டுகள் மட்டுமே உன் சொற்படி கேட்டு உதவுவேன் என வாக்களித்திருந் தேன். அந்தக் காலக்கெடுவும் நேற்றோடு முடிந்துவிட்டது ஆகவே இனி என்னை அழைக்காதே; மீறி அழைத்தால் உனக்குத் துன்பமே விளையும். இந்நிலை யில் உனக்குக் காட்சியளித்ததே அதிகம். நீயோ மற்றவர்களுக்குக் காட்சியளிக்கும்படி கேட்கிறாய் என்று சொல்லிச் சிரித்தாள்.

அதைக் கேட்ட சம்பந்தாண்டான் இடியுண்ட நாகம் போலானான். அம்பிகையைப் பலவாறு தோத்தரித்து இறுதியாக ஒரே ஒரு உதவியாவது செய்யும்படிக் கெஞ்சினான். அதற்கு அவளும் உடன் பட்டாள். தேவி நீ எனக்கு காட்சி தராமல் போய்விட்டாலும் பரவாயில்லை. அருணகிரிநாதர் அழைக்கும்போது முருகன் வராமலாவது பார்த்துக்கொள் அது போதும் என்று கேட்டான். அதைக் கேட்ட காளி, உன் தீய குணம் இப்போதும் மாறவில்லையே. என்னால் ஆனவரை முயற்சிப்பேன். மற்றவை சிவனருள் என்று சொல்லி அவன் பதிலுக்குக் காத்திராமல் மறைந்தாள்.

சம்பந்தாண்டான் மனம் துவண்டான் என்றாலும், அவனுக்கு நல்ல புத்தி உண்டாகவில்லை. போட்டிக்குக் குறித்த நாளும் வந்தது. அரசனும் மக்களும் அண்ணாமலையார் ஆலயத்தில் கூடினர். அருணகிரிநாதரும் சம்பந்தாண்டானும் உரிய இருக்கையில் அமர்ந்தனர்.

சம்பந்தாண்டானுக்குத் தாம் தோல்வியடைவோம் என்பது முன்பே தெரிந்து விட்டதால், அரசனிடம் அருணகிரிநாதர் தான் முதலில் வாக்களித்தார். அதன்படி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரே முதலில் முருகனைக் காட்டட்டும் என்றான்.

அருணகிரிநாதர் தன் ஞானத்தால் இதை உணர்ந்து சிரித்துக் கொண்டார். பின்னர் அரசனிடம் மன்னரே! இதோ உள்ள பதினாறு கால் மண்டபத்தில் ஈசானத் தில் உள்ள தூணில் முருகன் காட்சி யளிப் பான்.அவனுடைய கோடி சூர்யப் பிரகாசத் தைக் கண்டால் நம் கண் தாங்காது எனவே, இங்கு ஏழு திரைகளை இடுவாய் என்றார். அதன்படியே ஏற்பாடுகள் செய்யப் பட் டன.

பின்னர் முருகனைத் தியானித்து அங்கு காட்சிதரும்படி வேண்டித் துதித் தார். நேரம் கடந்தது. தன்தவயோக சாதனையால் முருகப்பெருமான் வீற்றிருக் கும் இடத்தைக் கண்டார்.

அங்கு, பார்வதிதேவி முருகனை மடி யில் அமர்த்திக் கொண்டு அவன் வெளி யேறி வராதபடி பார்த்துக் கொண்டிருப்ப தைக் கண்டார்.

வேலும் மயிலும் துணை என்று கூறி அவற்றைத் தன் உதவிக்கு வரும்படி வேண்டினார். மயிலைத் தியானித்தார். அதைக் கேட்ட மயில் அம்பிகையின் முன்வந்து நடமிடத் தொடங்கியது. அதன் ஆட்டத்தால் மகிழ்ந்த பார்வதி தேவி, கைகளைக் கொட்டித் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள். அந்த தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு முருகன் மயில் மிசை ஏறி அருணகிரிநாதர் மனம் குளிர்ந்து மகிழ அவர்முன் தோன்றினார். அக்காட்சி யால் மனமுருகிய அவரது உள்ளத்திலிருந்து பின்வரும் பாடல் பீறிட்டு எழுந்தது.

அதலசேடனாராட அகிலமேருமீதாட
அபினகாளி தானாட - அவளோடன்று
அதிரவீசிவாதாடும் விடையிலேறுவாராட
அருகுபூதவேதாளம் - அவையாட
மதுரவாணிதானாட மலரில் வேதனாராட
மருவுவானுளோராட- மதியாட
வனசமாமியாராட நெடிய மாமனாராட
மயிலுமாடி நீயாடி - வரவேணும்

. . . . .

உதயதாம மார்பான ப்ரபுடதேவமாராஜன்
உளமுமாட வாழ்தேவர் - பெருமாளே

முருகனுடன் அகில மேருவின்மீது சிவ பார்வதியுடன் எல்லா தேவதேவியரும் முக்கியமாக சம்பந்தாண்டானின் உபாசனா தேவதைகாளியும் கூட நடமாடி வருவதைத் தனிச் சிறப்புடன் இப்பாடல் விளக்குகிறது.

முருகன் அனைவரோடும் அங்குக் கம்பத்திலே தோன்றிக் காட்சியளித்தான். அதுவே இந்நாளில் திருவண்ணாமலை ஆலயத்தில் கம்பத் திளையனார் சந்நிதியாக விளங்குகின்றது .

மயில் தனது ஆட்டத்தினால் அருண கிரிநாதருக்கு வெற்றியைத் தந்தது. இதன்மூலம் மயிலின் உதவியால் பகையை வெல்வது எளிது என்பது உறுதியாகிறது. எனவே, அன்பர்கள் வேலுண்டு வினை யில்லை மயிலுண்டு பயமில்லை குகனுண்டு குறைவில்லை' என்று துதிக்கின்றனர்.

மயிலின் பல்வேறு பெயர்கள்

மயிலுக்குரிய பல்வேறு பெயர்களை நிகண்டுகள் கூறுகின்றன.ஆசிரிய நிகண்டு, 1.சிகி, 2. பிணிமுகம், 3. தோகை, 4. ஞமலி, 5. ஓகாரம், 6.மயூரம், 7. நவிரம், 8. சிகண்டி, 9.கேகயம், 10.மஞ்ஞை 11.உகரம், 12.கமலாலயம், 13. மயில் என்னும் 13 பெயர்களை மயிலுக்கு உரியதாகத் கூறுகிறது.

இதைபொட்டி முருகன் 1. சிகிவாகனன், 2.பிணிமுகன் ஊர்ந்தோன், 3. தோகை யாண்டவன், 4.ஞமலியம்பரியன், 5.காரஞ்சிகாநாயகன், 6. மயூரநாதன், 7. நவிரம்மேவலன், 8.சிகண்டியில் ஏறும் பிரான், 9.கேகய நாயகன், 10. மஞ்ஞை ஊர்தியோன், 11.உகர நடனன், 12. கலாபத்தனி மயூரத்தன், 13. மயில் வாகனன் எனும் பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடியவர் வாழ்வில் மயில் செய்த அற்புதம்

முருகப் பெருமானின் வாகனமாகிய மயில் அடியவர்கள் நோயுற்ற போது அவர்கள் முன்னே தோன்றி அவர்களைக் குணப்படுத்திய வரலாறுகள் பல உள்ளன. அவற்றில் அண்மையில் நடந்த தனிச் சிறப்புப் பெற்ற ஒரு வரலாறு இங்கே இடம்பெறுகிறது

1923ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் தேதி பாம்பன் சுவாமிகள் பகல் 10.30 மணியளவில் சென்னை டவுன் வைத்தி யநாதன் முதலி தெருவில் இருந்து லிங்கிச் செட்டி தெருவிற்கு நடந்து வந்து கொண் டிருந்தார். வேகமாக வந்த குதிரை வண்டி அடிகளாரைக் கீழே தள்ளி விட்டது. அதன் சக்கரம் அடிகளாரின் இடக்காலின் மீது ஏறி கணைக்கால் எலும்புகள் முறிந்து விட்டன.

பதறிப்போன அடியார்கள் அவரை ஒரு வண்டியில் படுக்க வைத்து என்ன செய்யலாம் என்று, அவரிடமே ஆலோ சனை கேட்டனர். அதற்குச் சுவாமிகள் நான் கூற எதுவும் இல்லை. எல்லாம் முருகன் செயல் நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள் என்றார்.

அடியவர்கள் அவரைச் சென்ட் ரல் ரயில் நிலையம் எதிரில் இருக்கும் பெரிய ஆஸ்பத்திரி (எ) பொது மருத்துவமனை யில் சேர்த்த னர். மன்றோ வார்டு என்ற இடத்தில் தரைப்பகுதியில் உள்ள 11வது எண் ணுள்ள அறையில் அவருக்கு இடம் ஒதுக்கித் தரப்பட்டது.

சுவாமிகளின் அடியவர்களான திருவல்லிக்கேணி ஜோஸ்யர் சின்ன சாமிப்பிள்ளையும் அவர்கள் மனைவி திருமதி பாப்பாத்தி அம்மாளும் இந்தச் செய்தி கேள்விப்பட்டு மருத்துவ மனைக்கு வந்துசேர்ந்தனர். சுவாமி க ளின் நிலைமை யைக் கண்டு " ஓ" வென்று கதறி அழுதனர்.

அவருக்கு வைத்தியம் தொடங்கியது. இந்த நாட்களில் ஜோதிடரும்(சுப்ரமணி யதாசர்) அவர் துணைவியாரும் இரவு, பகல் பாராமல் சுவாமிகளைக் கவனித்துக் கொண்டனர். அவர்கள் சுவாமிகளைக் காப் பது முருகன் அருள் மட்டுமே என்ற திடச் சித்தத்துடன் பகை கடிதலையும் சண்முகக் கவசத்தையும் தொடர்ந்து பாராயணம் செய்து வந்தனர்.

பாராயணம் செய்து வந்தவர்கள் சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க என்ற தொடரை ஓதும் போது சுவாமிகளின் முறிந்த கால் பகுதியின் எலும்புகளை இரண்டு வேல்களின் இலைப்பகுதிகள் பொருந்தியிருக்க, மூன்றா வதுவேல் அதைத் தாங்கி நிற்கும் காட்சியை அடிக்கடி அவர்கள் கண்டனர்.

மருத்துவமனையில் சேர்ந்த பதினோ ராம் நாள் இரவில் (அந்நாள் மார்கழி 22-ஆம் தேதி பிரதமை திதி பூராட நட்சத்திரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகும்) சுவாமிகளுக்கு அரிய காட்சி ஒன்று கிடைத்தது.

அக்காட்சியில் பெரிய மயில் ஒன்று தோன்றியது. அதன் அருகே சிறிய மயில் ஒன்றும் தோன்றியது. அவை இரண்டும் நடனமாடியபடியே கிழக்கில் இருந்து தோன்றி மேற்கே சென்றது.

அக்காட்சி மறைந்ததும் முருகன் சிறிய குழந்தை வடிவில் தோன்றி சுவாமிகளின் படுக்கையில் தலைவைத்துப் படுத்துக் காலை நீட்டியிருந்தான். சுவாமிகள் அவனைக் குமாரன் என உணர்ந்த போழ்தில் மறைந்து விட்டான்.

முருகன், சுவாமிகளுக்கு இன்னும் பதினைந்து நாளில் புண் ஆறிவிடும். அதுவரை இவ் விடத்தை விட்டுச் செல்ல வேண்டாம் என்றுகட்டளையிட்டார். பின்னர்சுவாமிகளின் கால்முறிவைப் பரிசோதித்த டாக்டர்கள் கால் எலும்பு கூடி வருவதைக் கண்டு அதிசயித்தார்கள்.

அம்மருத்துவமனையில் பணியாற்றி வந்த ஒரு பெண் மருத்துவ அதிகாரி சுவாமிகளுக்குக் கால்முறிவு குணமானது கண்டு அதிசயித்து உப்பு சாப்பிடாத உங்களின் வயதான உடல்நிலையில் கால் குணமாகியது அதிக வியப்பை உண்டாக்குகிறது என்று சொல்லி மகிழ்ந்தார்.

அவர் தன்னுடைய வாழ்வில் நடந்த இந்த நிகழ்ச்சியையும் பாலமுருகனைக் கண்டு மகிழ்ந்த அனுபவத்தையும் அசோக சாலவாசம் எனும் நூலில் விவரித்துள்ளார்.

மேலும் இந்நிகழ்ச்சியை நினைவு கூரும் பொருட்டு மார்கழித் திங்கள் பிரதமை நாளில் மயூர வாகன சேவன விழா என்ற விழாவையும் ஏற்படுத்தினார். அது இன்றளவும் அவருடைய அதிட்டானத் தில் சிறப்புடன் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. திருவான்மியூரில் அவர் வாங்கிய (சமாதித் தலம் உள்ள இடம்) இடத்திற்கு மயூரபுரம் என்று பெயர் சூட்டியுள்ளார். ஃ

மயிற்பீலிகள்

மயில் வணக்கத்திற்குரியதாக விளங்கு வது போலவே, மயிலின் தோகைகளும் தெய்வீகத்தன்மை கொண்டதாகவும், தியாகத்தின் சின்னமாகவும் போற்றப்படுகின்றன. போர் வீரர்களின் வேல்களில் மயில் பீலியைக் கட்டி வைப்பர். காவடிகளில் சிறுகட்டாக மயிற் பீலியை நாற்புறமும் கட்டுகின்றனர். வீரர்கள் மயிற்பீலியைத் தலையில் அணிகின்றனர்.

மயிற்பீலி கண் திருஷ்டிகளைப் போக்குவதுடன், தீய நோக்கத்துடன் பார்ப்பவரின் சிந்தனையை மாற்றுகிறது மயிற்பீலியால் வீசினால் பேய், பிசாசுத் தொல்லைகள் விலகும். வைத்தீசுவரர் கோயில் முதலிய சில தலங்களில் முருகனின் பிரபா மண்டலத்தின் மயில் தோகைகளால் அலங்கரித்திருப்பதைக் காணலாம்.

சமண சமயத் துறவிகள் மயிற்பீலியைப் புஞ்சமாகவும், இஸ்லாமியர்கள் மாந்திரீகத்திற்கும் பயன்படுத்துகின்றனர். பௌத்த சமயதேவியான மயூரி என்பவள் மயில் வடிவமாகவே வணங்கப்படுகிறாள்.

திருவான்மியூரின் காவல்தெய்வமாக விளங்குபவள் பீலி அம்மன். பீலி என்பது மயிற் பீலியின் சுருக்கமாகும். இவள் மயில் வடிவாக விளங்கியவள். இவளது ஆலயம் இந்நாளில் பீலி துர்க்கையம்மன் ஆலயம் என்றழைக்கப்படுகிறது. இப்போது இது ஐஐடி வளாகத்தில் உள்ளதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலையாகி நின்ற மயில்

கடல் மீது நடந்த போரின் இறுதியில், மாமரமாக நின்ற சூரபத்மனை, முருகன் வேலால் பிளந்தார். அவை மயிலும் சேவலுமாக மாறின. முருகன் மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் ஏற்று அருள்பாலித் தார்.பின்னர் மயிலாக விளங்கும் சூரபத்மன் மண்மேல் வந்துமுருகனைக் குறித்து தவம் செய்ய விரும்பினான். அவரிடம் அனுமதி பெற்று பூமிக்கு வந்து ஒரு மலையாக மாறித் தவம்புரிந்தான். அவ்வாறு அவன் மலையாகி நின்ற இடங்களே மயிலமலை, மயூரகிரி என்று பலவாறு அழைக்கப்படுகின்றன.

இந்த வகையில் இரண்டு மலைகள் சிறப்புடையதாக விளங்குகின்றன. அவற்றில் ஒன்று மயிலம்; மற்றது குன்றக்குடியாகும்.

மயிலமலை

சென்னை- விழுப்புரம் சாலையில் சென்னையிலிருந்து 125வது கிலோ மீட்டரில் உள்ள கூட்டேரிப்பட்டு எனும் இடத்திற்குக் கிழக்கே பாண்டிச்சேரி செல்லும் சாலையில் 3வது கிலோ மீட்டரில் இருப்பது மயிலம் எனும் திருத் தலமாகும். இங்குச் சிறுகுன்றும் அதன்மீது சுப்பிரமணியர் ஆலயமும் அமைந்துள்ளன

மயிலேஇங்குமலையாக அமைந்திருப்பதால், இம்மலை மயிலமலை என்றழைக்கப் படுகிறது.

சூரபத்மன் மலையாக இருந்து தவம் செய்து தன் மீது முருகப் பெருமான் நிலையாகத் தங்க வேண்டும் என்று வேண்டியதாகவும், அதன்படி முருகன், வள்ளி, தெய்வயானையுடன் இங்கு எழுந்தருளியிருப்பதாகவும் கூறுவர். இந்த மலைக்கு அழகிய படிக்கட்டுகள் உள்ளன. இவ்வூர் இறைவன் மீது பாடிய புராணம் மயூராசலப் புராணம் ஆகும்.

குன்றக்குடி

பாண்டியநாட்டிலுள்ள குன்றக்குடி அழகிய முருகன் தலமாகும். சிறந்த பிரார்த்தனைத் தலமாகத் திகழ்கிறது. இத்தலத்து முருகனைத் திருப்புகழில் அருணகிரி நாதர்,' திகழும் மயிலின் மலைக்கண் பெருமாளே ' என்று பாடிப் பரவுகின்றார்.

இம்மலை தூரத்தில் இருந்து பார்ப்பதற்கு மயிலைப் போலத் தோன்றுகிறது. இத் தலத்தின் மீது பாடப்பெற்றதே மயூரகிரிப் புராணமாகும்.

இத்தலத்தில் முருகன் ஆறுமுகங்களுடன் விளங்குகிறார். கருவறையில் முருகன், வள்ளி, தெய்வயானை ஆகிய மூவரும் தனித் தனியே மயில் மீது அமர்ந்து காட்சியளிக்கின்றனர். இத்தலத்துவிநாயகர் தோகையடி விநாயகர். (தோகை - மயிலுக்கு ஒரு பெயர்)

மயூரகிரிப் புராணம்

மயூரகிரி என்பது இந்நாளைய குன்றக் குடியின் புராணப் பெயராகும். அதன்மீது பாடப் பட்ட இந்நூல் மயூரகிரிப் புராணம் என்றழைக்கப்படுகிறது. இது மயூரகிரி மான்மியம் என்ற வடமொழி நூலின் மொழி பெயர்ப்பாகும். மொழி பெயர்த்துப் பாடியவர் சிவகங்கை வித்துவான் வேதாந்த சுப்பிரமணியப் பிள்ளை என்பவராவார்.

இந்நூல் 1885 ஆம் ஆண்டு வாக்கில் வித்வசிரோன்மணிந.க.பொன்னம்பலம் பிள்ளை அவர்களால் பிழையறப் பரிசோதித்துப் பொழிப்புரையுடன் வெளியிடப் பட் டுள்ளது.மீண்டும் திருத்தமுற 1937ஆம் ஆண்டில் ம.வே.திருஞான சம்பந்தன் அவர்களால் விளக்கமாகப் பதிக்கப் பெற்றுள்ளது. இந்நூலில் கந்தவேளின் விரதங்கள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

இதனை இலங்கையிலும் பாண்டிய நாட்டிலும் சஷ்டி, கிருத்திகை முதலான நாட்களில் பாராயணம் செய்து வந்தனர் என்பர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயிற்பொறி

சிவனடியார்களில் சிலர் தங்களைச் சிவன டிமை என்று காட்டத் தமது இரண்டு தோளிலும் சூலக்குறியையும் இடபக் குறியையும் பொறித்துக் கொள்வர். இவ்வாறே வைணவர்கள் சங்கு சக்கரங் களைப் பொறித்துக் கொள்வர்.

சூலம் இடபச் சின்னங்கள் கொண்ட (செம்பு அல்லது இரும்பால் ஆக்கப் பட்ட சிறு வடிவங்களைப் பழுகக் காய்ச்சி உரிய மந்திரங்களைக் கூறி அவற்றைத் தோளில் சூடிட்டுக் கொள்ளுதலே முத்திரை பொறித்தல் எனப்படும். அந்தப்புண் ஆறிய பின் அந்த வடுக்கள் தோளில் நீங்காமல் இருக்கும்.) இதற்கு முத்திரை போட்டுக் கொள்ளுதல்(அல்லது) பொறித்துக் கொள் ளுதல் என்று பெயர்.

திருநாவுக்ககரசு நாயனார் தம்மை சிவனடிமை என்று தெளிவுபடுத்த சூலக் குறியும் இடபக்குறியும் பொறித்தருள வேண்டுமென்று பெண்ணாடகம் இறைவ னிடம் விண்ணப்பித்தார். பெருமான் ஒரு பூதத்தை அனுப்பி அவர் தோளில் சூலக் குறியையும் இடபக் குறியையும் முத்திரை யாக இட்டான்.

இதனைப்போலவே முருகடினயார்கள் வேற்பொறியையும் மயில் பொறியையும் தமது தோளில் பதித்துக் கொள்ள வேண்டு மென்பர். ஆனால் நடைமுறையில் இதனைக் காண முடியவில்லை. திருநாவுக் கரசு நாயனாருக்குப் பெருமான் முத்திரை யிட்டது போலவே தனக்கும் முத்திரையிட வேண்டு மென்று அருணகிரி நாதர் எட்டுக் குடி பொதி, திருத்துருத்தி ஆகிய திருத் தலங்களில் அருளிய திருப் புகழ்ப் பாடல் களில் வேண்டினர். அவர் விருப்பப்படியே பொதிகை மலையில் முருகன் அவருக்கு " வேலையும் மயிலையும்" அடையாளமாக பொறித்தான் என்பதைக் குறித்துள்ளார்.

இவற்றை அணிந்து முறைப்படி ஒழுகு வார்க்கு யம பயம் இல்லை.

மயில் தாங்கும் சேவடியோன் – முத்துக்குமாரசுவாமி

முருகனின் திருவடி மயிலின் மீது பதிந்துள்ளது. அருணகிரி நாதர் மயிலின் முதுகிலும், திருப்புகழ் ஏட்டிலும் தேவர் தம் தலைமீதும் அந்த திருவடிகள் உள்ளதாக உவக்கிறார். மயில்மீது தமது ஒரு திருவடியை ஊன்றி வில்லேந்தி நிற்கும் குமரனை சில தலங்களில் காணலாம். இவரை முத்துக்குமாரசுவாமி என்று அழைப்பர்.

சென்னை கந்த கோட்டம், திருப்போரூர், கந்தசாமி கோயில் ஆகியவற்றில் அழகிய உலாத் திருமேனியாகவும் திருவண்ணா மலை முதலிய தலங்களில் கற்திருமேனியாகவும், இவரைக் காண லாம். திருப்போரூரில் உள்ள வடிவம் கலையழகு நிரம்பிய தாகும். முருகன் தன்மீது ஊன்றுவதைத் தாளாது மயில் அழுந்தி யிருப்பதுபோல் அமைக்கப்பட்டிருப்பது கண்டு மகிழத்தக்கதாகும்.

தாவடியோட்டும் மயிலிலும் தேவர் தலையிலும் என்
பாவடியேட்டிலும் பட்டதன்றோ படி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூடம் முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்தன் சிற்றடியே

– கந்தர் அலங்காரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயில் கொடி

இந்திய மரபில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு கொடி உண்டு. சிவபெருமானுக்கு இடபக் கொடியும், திருமாலுக் குக் கருடக் கொடியும், மன்மதனுக்கு மீன் கொடியும், விநாயகருக்கு எலிக்கொடியும், இன்னும் பல்வேறு தெய்வங்களுக்குப் பல வகையான கொடிகளும் இருக்கக் காணலாம்.

பொதுவாக தெய்வங்களின் வாகனங்களே அவர்களின் கொடியில் இலச்சினையாக இருக்கும். ஆனால், முருக வழிபாட்டில் மட்டும் ஒரு தனிச்சிறப்பு இருக்கின்றது. இலக்கிய மரபுப்படியும்தமிழகத் தொன்மை வழிபாட்டின்படியும் முருகனின் கொடியில் விளங்குவது சேவலே என்றாலும், நடைமுறையில் முருகன் ஆலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழா வின்போது மயில் கொடியை ஏற்றும் வழக்கமே இன்று இருந்து வருகிறது.

இதனையொட்டி மயில்யாகமும் தொடர்ந்து மயில் சின்னம் பொறித்த கொடியை ஏற்றும் வழக்கமும் இருந்து வருகிறது.

நீண்ட வெள்ளைத் துணியில் மயிலின் படத்தை எழுதி அதனைச் சுற்றி (சாமரம், கண்ணாடி ஸ்ரீவத்சம், ஸ்வஸ்திகம். பூரண கும்பம். அடுக்கு தீபம். சங்கு. குடை ஆகிய) அஷ்ட மங்கலங்களை எழுத வேண்டும். தேனையும் நெய்யையும் கலந்து மயிலின் கண்ணில் பூசிக் கண் திறந்து, அதனை மயில் வாகனமாகப் பூசித்துப் பின்னர் கொடி மரத்தில் ஏற்றுகின்றனர். ❀

அஷ்டமயில்

முருகன் அஷ்ட மூர்த்தமாக எட்டு வடிவம் தாங்கி எழுந்தருளும் போது ஏறி வரும் எட்டு மயில்களே அஷ்ட மயில் எனப்படும். இவை எட்டுத் திக்கிலும் இருந்து உலகினைக் காக்கும் என்பது மரபாகும். இவை முருகன் ஆலயத்தில் முருகனின் பீடத்தில் எட்டுத் திக்கிலும் விளங்கும் பழனி மலையின் எட்டுத் திக்கிலும் மயில் மண்டபங்கள் அமைக்கப்பட்டு எட்டு மயில்கள் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளன.

குமார தந்திரத்தில் மயிலை வழிபடும் முறை கூறப்பட்டுள்ளது. இதன்படி நடுவில் ஒரு கலசத்தை வைத்துச் சுற்றிலும் எட்டுக் கலசங்களை அமைக்கின்றனர். அவற்றில் எட்டு மயில்களைப் பூசிக்கின்றனர். இந்த எட்டு மயில்களின் பெயர்கள் **புஜங்க புவன், நீலகண்டன், கனப்பிரியன், கலாபினன், சிகி, வர்ஹி, பீலிபிஞ்சினன்,கேசினி** என்பவனாகும். ❀

மயில் (மயூர காயத்ரி)
மந்திரம் நீகைண்டாய வித்மஹே சித்ர பக்ஷயாய தீமஹி

பீட மயில் பொதுவாக தெய்வங்கள் எழுந்தருளும் பீடத்தில் அஷ்டதிக் பாலகர்கள், அஷ்ட சக்தியர் முதலியோரைப் பூசிப்பது வழக்கம். அப்பீடத்தின் முகப்பில் அந்தந்த தெய்வங்களின் வாகனங்களை அமைப்பர். இவ்வகையில் முருகனின் பீடத்தில் மயில் நின்றிருப்பது போலவும் அமைக்கபடுகிறது. இதனை பீட மயில் என்பர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயூர பந்தம்

சித்திர கவிகளில் ஒன்று மயூரபந்தமாகும். இது மயிலின் வடிவில் உள்ள கட்டங்களில் எழுத்துக்கள் பொருந்தி அமையுமாறு பாடல்களை இயற்றும் முறையாகும். இம்முறையில் முருகப் பெருமானின் சிறப்பை விளக்கும் பாடலை மயிலின் உருவத்தில் அமையும் வகையில் நூறு எழுத்துக்களைக் கொண்டதாகப் பாம்பன் சுவாமிகள் ஒரு மயூர பந்தத்தை அருளிச் செய்துள்ளார். இனி அதனை இங்குக் காணலாம்.(பாடல் நூறு எழுத்துக்கள் படத்தில் பல எழுத்துக்கள் திரும்பத் திரும்ப வருவதால் அறுபத்து நான்கு எழுத்துக்களே இடம்பெற்றுள்ளன.)

மூலம்

வரதந திபநக ரசுமுக வொருகுக வறிதுத புவிரிவிதி
மரகத வரிபர மதுகளி லசலவி மலமழ வெனலிரிய
மரபுறு குறுமுனி வருதிம யலசர மதிவிரி விபுதகுரு
சுரபதி நவரச பரததி நகரம துகமழ முனிவருதி.

(பிரித்து எழுதிய பாடல்)

வர தந திப நகர சுமுக ஒரு குக வறிது தபு விரி விதி
மரகத அரி பரம துகள் இல் அசல விமல மழஎன் அல்இரிய
மரபுறு குறு முனி உதிமயல் அசர மதிவிரி விபுத குரு
சுரபதி நவரச பரத திநகர- மதுக மழமுனி வருதி



பொருள்

வர தந-விரும்புவர்களுக்கு வேண்டிதெலாம் அளிக்கும்) வரத்தையும் தனத்தையும் உடைய; **திபநகர**- பிரகாச மயமான நகரத்தில் வாழ்பவனே; **சுமுக** - அழகியமுகமுடையானே; **ஒருகுக**- (ஆன்மாக்களின் இருதய குகையின்கண் இருத்ததலின்) ஒப்பற்ற குகனெனும் பெயருடையானே; **வறிதுதபு**- குறைவற்ற பெருந்தொழிலுள்ள; **விரி விதி- மரகத**- பச்சை நிறமுள்ள; **வரி** - தேராகு மயில் வாகனத்தின் **பரம்** - கடவுளே;

துகள் இல்- குற்றமில்லாத; **அசல**(திருப் பரங்கிரி, திருச்செந்தில், திருப்பழனி, திருவேரகம், திருச்சோலை மலை, திருக்குன்று தோறாடல் எனப்படும்) மலையனைத்தையும் தனக்குத் திருக் கோயில் களாகக் கொண்ட;**விமல**- அழுக்கில் லாதவனே! **மழஎன்**-அறிவுமுதிர்ச்சியில்லாத வெனது **அல்இரிய**- (ஆணவ) இருளானது கெடும்படி; **மரபுறு** - பாரம்பரியமான பெரியார் தன்மையுற்ற; **குறு முனிவர்** - அங்குஷ்ட அளவான அகஸ்திய மாமுனிவர்க்கு; **உதிமயல்**-உதித்த மயக்கத்தையும்; **அசரமதி**-சுவாசமில்லாத யோக அறிவையும்;**விபுதகுரு** - விரிவிளங்கச் சொல்லி அருளிய(பெரிய அறிவாளனான ஆசாரியனே) குருவே ; **சுரபதி**- தேவர்கள் தலைவனே; **நவரச**- (சிங்காரம், வீரியம், பெருநகை, கருணை, இரௌத்திரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயமெனும்) ஒன்பது இரசமுள்ள; **பரத**- நாடக நாயகனே!; **திநகர**- உலகை நோக்குமுயிர்க்கண்ணுக்கு ஒளியாக நிற்கும் வான சூரியனாகவும் அச்சூரியனை உடம்பாகவுடையானாகவும் ஆன்ம அறிவாகிய கண்ணுக்கு ஒளியாக நிற்கும் ஞான சூரியனாகவும் விளங்குவோனே; **மதுக**- இனிமை யான; **மழ**- மாறா இளநலமுள்ள; **முனி**- முனிவடிவுடையானே **வருதி**- வந்தருள்வாயாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பாடல் மூக்கில் தொடங்கி உடலில் தொடர்ந்து தோகையில் இடமும் வலமுமாகச் சென்று வட்டமிட்டு மீண்டும் உடல் வழியே மூக்கிற்கு வந்து தொண்டையைச் சுற்றிக் கொண்டு மீண்டும் தோகையை வட்டமிட்டுத் தோகையின் உச்சியில் முடிகிறது கண்டு மகிழத் தக்கதாகும்.

மயிலாட்டிகள்

முருகன் கோயில்களில் நடனமாடும் பெண்கள் செட்டி தாசிகள் என்றும், மயிலாட்டிகள் என்றும் அழைக்கப்பட்டனர். முருகனையே பதியாக எண்ணி வாழ்ந்த இப்பெண்கள் முருகனுக்கு நடைபெறும் பூசை யின்போது நடனமாடியும், விளக்கேற்றியும், தீபாராதனைக்கு உதவியும் வாழ்வைக் கழித்தனர். மயில் போன்ற சாயலையும் அழகும் கொண்டு முருகனுக்குப் பணிபுரியும் மயிலாகவே இப் பெண்கள் வாழ்ந்ததால் இவர்கள் மயிலாட்டிகள் என்றழைக்கப்பட்டனர் என்பர்.

மயில் என்பதற்குச் சுதந்திரமானது என்பது பொருள். காட்டில் சுதந்தரமாகத் திரியும் பொலி காளைகளை மயிலைக் காளைகள் என்று கூறுவது இங்குச் சிந்திப்பற்கு உரியதாகும். முருக வழிபாட்டில் ஈடுபட்டு யாருக்கும் மனைவியாகாமல் வாழ்ந்த பெண்கள் மயிலாட்டிகள் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

மயிலாட்டம் : விழாக்களில் மயில் போல் ஆடி மகிழ்வூட்டும் கலைஞர்கள் உள்ளனர். தலையின் மயிலின் கழுத்து வரையிலான உருவத்தைக் கட்டிக்கொண்டும், மயில் உடலை மார்பிலும், தோகையை முதுகிலும் கட்டிக்கொண்டு மயில்போலவே துள்ளியாடுவர். இதற்கு மயிலாட்டம் என்பது பெயர். இது தொன்மை மிகுந்த ஆட்டக் கலைகளில் ஒன்றாகும். இதைப் பின்பற்றியே காளையாட்டம் பொய்க்கால் குதிரை முதலியன தோன்றியதாகக் கூறுவர்.

மயிலாட்டம் ஆடுபவர் சில சமயம் முருகன் வேடமணிந்த சிறுவனை முதுகில் சுமந்தவாறு ஆடுவதும் உண்டு, பரத நாட்டிகக் கலைஞர்களும் தமது நிகழ்ச்சியில் மயிலாட்டம் என்னும் கலை வடிவத்தை ஆடுகின்றனர். தலைமீது மயிலின் முகத்தையும், பின்புற இடுப்பில் நீண்ட தோகையையும் கட்டிக்கொண்டு ஆடுவர். இடையிடையே தோகையை விரித்து துள்ளித் துள்ளி ஆடுவர். இது பார்ப்பதற்கு மயில் ஆடுவது போலவே இருக்கும்.

நடமிடும் பெண்கள் நாட்டிய மயில் எனவே அழைக்கப்படுவர். மயில் வாகன சேவையில் முருகன் பவனி வரும் போது மயில்வேடமணிந்த பெண்கள் கூட்டமாக ஆடிப்பாடும் வழக்கம் இருந்து வந்துள்ளதை அறிகிறோம்

மயிலாடும் பாறை

குன்றக்குடியில் மயிலாடும் பாறை என்ற பாறையும், அதன்மீது மண்டபமும் அமைந்துள்ளன. சில காலத்திற்கு முன்புவரை நாட்டியமாடும் பெண்கள் பெருந்திருவிழாவின்போது ஒருநாள் இம்மண்டபத்திற்கு முருகனை எழுந்தருளுவித்து ஆடிப்பாடிப் பூசிப்பது வழக்கமாக இருந்து வந்துள்ளது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயில் வகுப்பு

தானதன தந்தன தானதன தந்தன
தானதன தந்ததன தந்த தனை

ஆதவனும் அம்புலியும் மாசுற விழுங்கி உமிழ்
ஆலமருவும் பணி - இரண்டும் அழுதே
ஆறுமுகன் ஐந்துமுகன் ஆனைமுகன் எங்கடவுள்
ஆமென மொழிந்தகல - வென்று விடுமே
ஆர்கலி கடைந்தமுது வானவர் அருந்த அருள்
ஆதிபகவன் துயில் - அனந்தன் மணிசேர்
ஆயிரம் இருந்தலைகளாய் விரிபணங்குருதி
ஆகமுழுதும் குலைய - வந்தறையுமே

வேதமுழுதும் புகல் ராமன் ஒரு தம்பிமிசை
வீடணன் அருந்தமயன் - மைந்தன் இகலாய்
வீசும் அரவம் சிதறி ஓடவரு வெங்கலுழன்
மேல்இடி எனும்படி - முழங்கி விழுமே
மேதினிசுமந்த பெருமாசுணம் மயங்க நக
மேவுசரணங்கொடு உலகு- எங்கு முழுமே
வேலியென எண்திசையில் வாழும் உரகம் தளர
வே அழலெனும் - சினமுடன் படருமே

போதினில் இருந்தகலை மாதினை மணந்த உயர்
போதனை இரந்து மலர் - கொண்டு முறையே
பூசை புரிந்து கொடியாகி மகிழ் ஒன்று துகிர்
போல்முடி விளங்கவரும் - அஞ்சம் அடுமே
பூதரொடு கந்தருவர் நாதரொரு கிம்புருடர்
பூரண கணங்களொடு - வந்து தொழவே
போரிடுவ வென்று வெகுவான கணங்கள் உயிர்
போயினம் எனும்படி - எதிர்ந்து விழுமே.

கோதகலும் ஐந்து மலர் வாளிமதனன் பொருவில்
கோல உடலங் கருகி - வெந்துவிழவே
கோபமொடு கண்ட விழி நாதர் அணியும் பணிகள்
கூடிமனம் அஞ்சிவளை - சென்று புகுமே
கூவிஇரவந்தம் உணர் வாழியென நின்று பொரு
கோழியொடு வென்றிமுறை - யும்பகருமே
கோலமுறு செந்தில்நகர் மேவுகுமரன் சரண
கோகனதம் அன்பொடு - வணங்கு மயிலே.

(இப்பாடலின் திரண்ட பொருள்)

செந்தில் நகர் மேவும் குமரப் பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி நிற்கும் மயிலானது,

1.முருகன், சிவன், விநாயகர் ஆகிய மூவரையும் வணங்குகிறேன் என்று சொல்லிய காரணத்தால் சூரியனையும் சந்திரனையும் விழுங்கி உமிழும் ராகு, கேது எனும் பாம்புகளை அழிக்காமல் விட்டுவிட்டது. 2. பாற்கடல் கடைய உதவிய திருமாலின் படுக்கையான அனந்தன் எனும் பாம்பினை அதன் உடல் நடுங்குமாறு ரத்தம் பெருக அறைந்து தள்ளும்.

3.இராமனின் தம்பியாகிய இலட்சுமணனின் மீது இராவணனின் மகனான இந்திரஜித் விட்ட கொடிய நாக பாசத்தை எளிதாக விலக்கிய கருடனின்மீது இடிபோல விழுந்து அதனைத் துன்பப்படுத்தும். 4. பூமியைச் சுமக்கும் ஆதிசேடனின் மனம் வருந்தும்படியாக உலகினைச் சுரண்டும்.

5. எட்டு பெரும் நாகங்களான அட்டமாநாகங்கள் பயப்படும்படியாகக் கோபத்தோடு செல்லும். 6.சரஸ்வதியின் கணவனான பிரமதேவனின் வாகனமான அன்னத்தை அடுத்து வருத்தும்.

7. பூத, கந்தர்வ, கிரும்புஷ கணங்களும் தம்மைத் தொழும்போது வெற்றிபெற நிற்கும். அஷ்ட திக் கஜங்கள் மீது அவை தன் உயிரை இழந்தோம் என்று அஞ்சும்படியாகத் தாக்கும்.

8. மன்மதனை எரித்த சிவபெருமானது உடலில் ஆபரணமாக விளங்கும் பாம்புகள் அஞ்சி வளையில் சென்று புகுந்து கொள்ளும் படிச் செய்யும். 9. தன்னுடைய இத்தகைய வெற்றிகளை விடியலையும் வாழ்த்தையும் தெரிவிக்கும் கோழியிடம் தெரிவித்து மகிழும்.

இதன் பொருள் மயிலால் ஆகாதது எதுவுமில்லை. அது சர்வ வல்லமை பொருந்தியது என்பதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயில்விருத்தம்

அருணகிரிநாத சுவாமிகளால் பாடப்பட்ட மயில் விருத்தம் பதினோரு பாடல்களைக் கொண்டது. இதில் திருத்தணிகை மலைக் குமரனின் மயிலைப் பற்றியே அதிகம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அடிகளார் திருத்தணிகையில் எழுந்தருளி இருந்தபோது அருளிச் செய்திருக்க வேண்டும் என்பர். இதில் ஐந்தாம் பாடல் அம்பிகையையும் முருகனையும் பல அடை மொழிச் சொற்களால் சிறப்புடன் துதிக்கிறது. அதனையும் பதினோராம் பாடலையும் இங்கு காணலாம்

சோதி இம வேதண்ட கன்னிகையர் தந்த அபி
நய துல்ய சோம வதன
துங்க த்ரிசூலத்ரி கங்காளி சிவகாம
சுந்தரி பயந்த நிரைசேர்
ஆதிநெடு மூதண்ட அண்ட பகிரண்டங்கள்
யாவும் கொடுஞ்சிறகினால்
அணையும் தனது பேடை அண்டங்கள் என்னவே
அணைக்கும் கலாப மயிலாம்
நீதிமறை ஓதண்ட முப்பத்து முக்கோடி
நித்தரும் பரவு கிரியாம்
நீலகிரி வேலவன் நிராலம்பன் நிர்ப்பயன்
நிர்வியாகுலன் சங்குவாள்
மாதிகிரி கோதண்ட தண்டந்த தரித்த புயன்
மாதவன் முராரி திருமால்
மதுகைடப வாரிதிரு மருகன் முருகன் குமரன்.
வர முதவுவாகை மயிலே.

எந்நாளும் ஒரு சுனையில் இந்திர நீலப் போது
இலங்கிய திருத்தணிகை வாழ்
எம்பிரான் இமையவர்கள் தம்பிரான் ஏறும் ஒரு
நம்பிரானான மயிலைப்
பன்னாளும் அடிபரவும் அருணகிரிநாதன்
பகர்ந்த அதிமதுரச் சித்ரப்
பாடல்தரு மாசறு விருத்தம் ஒரு பத்தும்
படிப்பவர்கள் ஆதி மறைநூல்
மன்னான் முகம் பெறுவர் அன்னம் ஏறப் பெறுவர்
வாணி தழுவப் பெறுவரால்
மகராலயம் பெறுவர் உவணம் ஏறப்பெறுவர்
வாரிச மடந்தையுடன் வாழ்
அந்நாயகம் பெறுவர் அயிராவதம் பெறுவர்
அமுதாசனம் பெறுவர்மேல்
ஆயிரம் பிறைதொழுவர் சீர்பெறுவர் பேர்பெறுவர்
அழியா வரம் பெறுவாரே.

திருத்தணியில் முருகனுக்கு எதிரில் அவனது ஊர்தியான மயில் இல்லை. யானையே அங்கு அமைந்துள்ளது. மயில் அருவமாக இருப்பதாக ஐதிகம்

மயில் விருத்தத்தை மனம் கசிந்து உருகிப் படிப்பவர்க்ள் பிரம்ம பதவி, விஷ்ணுபதவி, வருண பதவி, இந்திர பதவி, குபேர பதவி ஆகியவற்றைப் பெறுவர். ஆயிரம் பிறை காண்பர். பெரிய சீர்களைப் பெறுவர், புகழ் பெறுவர், அழியாத நிலை பெறுவர்.

மயில் அலங்காரம்

தவத்திரு வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் மயில் அலங்காரம் என்னும் நூல் அருளப்பட்டது. அருணகிரிநாத சுவாமிகள் முருகன் பேரில் கந்தர் அலங்காரம் பாடியரு ளினார்கள். அவரை அடியொற்றி வந்த சந்தக் கவிஞர் தண்டபாணி சுவாமிகள் வேல் மீது வேல் அலங்காரத்தையும், மயில் மீது மயில் அலங்காரத்தையும், ஆறெழுத்தைச் சிறப்பிக்கும் வகையில் ஆறெழுத்தலங்காரத்தையும் அருளிச் செய்தார்கள்.

மயில் அலங்காரம் கடவுள் வாழ்த்து நூற்பயன் உட்பட 102 பாடல்களைக் கொண்ட தாகும். இது முருகப் பெருமானின் மயிலை நோக்கித் தன்னை வாழ்விக்க வேண்டுமென்று முறையீடு செய்வதாக அமைகிறது. மேலும் இதனுள் மயிலின் சிறப்புகள் பலவாறு பேசப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயில் மண்டபம்



முருகன் ஆலயங்களில் கருவறையிலுள்ள முருகனுக்கு நேர்எதிரே அவனுடைய மயில் வாகனமும் அதன் பின்னால் பலிபீடமும் அமைக்கப்பட்டிருக்கும்.

இந்த மயில் ஆன்ம மயில் எனப்படும். இது ஒரு பாம்பினை அலகில் பற்றியிருப்பதுடன் மற்றொரு பாம்பினை மிதித்தவாறு இருக்கும். பாம்பு என்பது குண்டலினி யோகத்தையும் வாசியோகத்தையும் சுட்டுகிறதென்பர்.

மூச்சுக்காற்றை முறைப்படி கட்டுப்படுத்தி, தவயோக சாதனையில் ஆன்மா இறைவனிடம்லயித்தியிருப்பதைப் பாம்பை மிதித்திருக்கும் **ஆன்ம மயில்** குறிக்கிறது என்பர் .

பக்தர்களின் ஆன்மாவே மயிலாக உருவகிக்கப்படுகிறது. தெள்ளத் தெளிந்தார்க்கு ஆன்ம மயிலில் பெருமான் காட்சியளிக்கின்றார் என்பர்.

மயிலின் அழகு புறப்பற்றுகளையும் உலகியல் கவர்ச்சியையும் குறிக்கிறது. அவற்றை நீக்கி முருகனிடம் ஆன்மா ஒன்றிவிட்ட நிலையில் உள்ளதாக இந்த மயில் உருவகிக்கப்படுகிறது. ஆகவே, ஆடாமல் அசையாமல் இருப்பதைக் குறிக்க தோகை தாழ்ந்து கிடக்கும் நிலை யில் இருப்பதாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மயில் எழுந்தருளியுள்ள மண்டபம் மயில் மண்டபம் எனப்படும். இம்மண்டபம் நான்கு கால்கள் கொண்டது. இதன் மீது சிறப்பான அழகிய விமானம் உள்ளது.

திருப்போரூரில் உள்ள மயில் மண்டபமும் அதைச் சுற்றி அமைந்த வட்டமான மண்டபமும் கலையழகுடன் திகழ்கின்றன.

சிறுவாபுரி மகரத மயில்

தொண்டை நாட்டுத் திருப்புகழ்த் தலமான சிறுவாபுரி முருகன் ஆலயத்தின் முன்புறம் இரண்டு மயில்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று அபூர்வமான பச்சைக் கல்லில் செய்யப்பட்டதாகும். இது கலையழகு மிக்கதாகத் திகழ்கிறது.



மெல்லிய கால்களில் நிற்கும் இதன் அழகும் கம்பீரமானபார்வையும் கண்டு களிக்கத் தக்கது தோகையின் கீழ் பாம்பு வடிவம் உள்ளதும் கவனிக்கத் தக்கதாகும்,

மயில் வளர்த்தல்

இந்திய மரபில் மயில் தெய்வீகப் பறவையாகக் கொண்டாடப்படுகிறது. மயிலைக் காண்பதால், மனதிற்கு மகிழ்ச்சி உண்டாகிறது. பல முருகன் ஆலயங்களில் மயில்களுக்குத் தனியே இடம் ஒதுக்கி அவற்றை வளர்க்கின்றனர். சென்னையில் சைதாப்பேட்டை செங்குந்த கோட்டம் முருகன் ஆலயம், பாம்பன் சுவாமிகள் அதிஷ்டானம், மயிலம் மலை முருகன் ஆலயம் முதலான எண்ணற்ற ஆலயங்களில் மயில்கள் வளர்க்கப்படுகின்றன. திருச்சி மாவட்டம் விராலிமலை, கோவை மாவட்டம் அனுவாவி, செங்கை மாவட்டம் திருத்தணி முதலிய மலைத் தலங்களில் எண்ணற்ற மயில்களைக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவியரும் மயில்களும்



இருபெரும்தேவியர்களான வள்ளியும் தெய்வயானையும் முருகப் பெருமானுடன் இணைபிரியாது இருக் கின்றனர். ஆதியில் மூவருமே மயில் வாகனத்தில் ஒருசேர அமர்ந்திருக்கும் உரு வங்களை அன்பர்கள் வழிபட்டனர். காலப் போக்கில் முருகனை மயில் மீது வீற்றிருப்பவனாகவும், தேவியர் இருவரும் அவனுக்கு இருபுறமும் தனியே நிற்கும் படியும் அமைத்தனர். புராண மரபுகளை யொட்டி இரண்டு தேவிய ரை யும் வாகனங் களுடன் அமைக்கும் வழக்கத் தை யும் சில கலைஞர்கள் மேற்கொண்ட னர். இவ்வகையில் சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்திலுள்ள சிங்கார வேலர் சந்நிதியில் முருகனுடன் உள்ள தேவியர் யானை வாகனத்தில் வீற்றிருக் கின்றனர்.

திருச்சியை அடுத்த திண்ணியம், பாண்டி நாட்டுத் தலமான குன்றக்குடி, திருமெய்யம் முதலிய ஊர்களிலுள்ள முருகன் ஆலயங்களில் கருவறையில் முருகன், வள்ளி, தெய்வயானை மூவரும் தனித் தனியே மூன்று மயில்களின் மீது உள்ளனர். சில தலங்களில் முருகன் வீதியுலா விற்கு எழுந்தருளும் போது வள்ளியும் தெய்வ யானையும் தனித்தனி மயில்களின் மீது உலா வரும் வழக்கம் உள்ளது.

பார்வதி தேவியார் பச்சையம்மன் என்ற பெயரில் தவம் செய்ய, கங்கை முதல் குமரி வரை பயணம் செய்ததாக நாட்டுப்புறக் கதைகள் கூறும். அவள் பயணத்தின்போது தங்கிய இடங்களே பச்சையம்மன் கோயில் களாக விளங்குகின்றன என்பர். பார்வதி யின் தவத் திற் குத் துணையாக மருமகளான வள்ளியம்மையும் வந்தாளாம். அவளே வனக்குறத்தி எனும் தெய்வமாக இந்த ஆலயங்களில் கொண்டாடப்படுகின்றாள். சில பச்சையம்மன் ஆலயங்களில் அவள் அழகிய மயில் மீது அமர்ந் தவளாகக் காட்சி யளிக்கின்றாள்.

நீலச் சிகண்டி

சிகண்டி என்பது பெண்ணிற்குள் ஆண்மை (அ) ஆண்மை பெண்மையின் நளினத்துடன் தோன்றும் சிறப்பு நிலையைக் குறிக்கும் சொல்லாகும். மகாபாரதத்தில் சிகண்டி என்பவன், பெண்ணாகப் பிறந்து தவம் செய்து ஆணாக மாறி பீஷ்மரை வெல்ல அருச்சுனனுக்கு உதவுகிறான்.

ஆண்மையுடன் பெருத்த வலிமை பெற்ற ஆண்மயில்கள் பெண்மையின் நளினத்தோடு கூடிய கவர்ச்சியைப் பெற்றிருப்பதுடன் ஆடல்களில் தனிச் சிறப்பிடம் பெற்றி ருப்பதால், சிகண்டி என்று அழைக்கப்படுகின்றன. குன்றக்குடிமலையை தலபுராணத்திலும், குன்றக்குடி குறவஞ்சி நூலிலும், சிகண்டிமலை என்று அழைக்கப்படுகின்றது. அருணகிரிநாதர் முருகனை நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் என்று போற்றுவதுடன் சிகண்டி வீரன் என அழைத்து மகிழ்கிறார். மயிலாடுதுறை திருப்புகழில் சிகண்டியூர் என்று குறிக்கப் பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயில் கொத்தும் என்று அஞ்சி

ஆழ்வார் திருநகரி எனும் ஊரில் ஒரு பெரிய வைணவ வித்துவான் இருந்தான். அவன் கல்வி கேள்வி களில் சிறந்தவன். எனினும் மிகுந்த ஆணவம் கொண்டவன். கல்விச் செருக்கால் பிறரை வசை கூறித் தாழ்த்துவதே அவனது வாழ்க்கையாகி விட்டது.

புலவர்களை வாதுக்கு அழைத்து தன் வாதத் திறமையால் அவர்களை அடக்கி, மிரட்டி அச்சுறுத்துவது அவனுடைய வழக்கம். இதனால் அவனைக் கண்டு புலவர்கள் எல்லோரும் அஞ்சினர். அவர்கள் அஞ்சுவதைக் கண்டு அவனுடைய இறுமாப்பு நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வந்தது.

அவன் வாதப் போரில் பிறருக்குப் பயங்கரனாக விளங்கியதால், அவனுக்குப் பிரதி வாதி பயங்கரன் என்ற காரணப் பெயர் உண்டாயிற்று. பின்னாளில் அவனுடைய உண்மைப் பெயர் மறைந்து இந்தப் பட்டப் பெயரே நிலைத்துவிட்டது.

அவன் குறுநில மன்னர்களின் சபைக்கு விஜயம் செய்து அங்குள்ள அவைக்களப் புலவர்களை வாதில் வென்று அந்தப் புலவர்களிடம் கப்பம் பெற்றுத் திரும்புவது வழக்கம்.

ஒரு சமயம் அவன் கொங்கு நாட்டிற்கு விஜயம் செய்தான். அந்நாளில் திருச்செங்கோட்டினை ஒரு குறுநில மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய அவையில் குணசீலர் என்ற புலவர் இருந்தார். அவர் சிறந்த முருக பக்தர் திருச்செங்கோட்டு வேலவனிடம் நிறைந்த பக்தி பூண்டவர்.



பிரதிவாதி பயங்கரன் குணசீலருக்கு தூதன் மூலம் ஓலை அனுப்பினான். அதில் அவர் தன்னை வாதில் வெல்ல வேண்டுமென்றும், இல்லையேல் தனக்கு அடிமையென்று ஒரு சீட்டு எழுதித்தர வேண்டுமென்றும் கூறியிருந்தான்.

குணசீலர் பிரதிவாதி பயங்கரனைப் பற்றி முன்னமே கேள்விப்பட்டிருந்ததால் அவனோடு வாது செய்ய விரும்பவில்லை. அதே சமயம் முருகப்பெருமானுக்கு அடிமை பூண்ட தான் இன்னொரு புலவனுக்கு அதுவும் ஒரு அகங்காரிக்கு அடிமை என்று எழுதித் தரவும் மனம் இடம் தரவில்லை. எனவே, செங்கோட்டு வேலனைப் பணிந்து தமது நிலைமையைக் கூறி விண்ணப்பித்துத் தொழுதார். பின்னர் வீடு திரும்பிப் பணிகளை முடித்தபின் இரவு கண் அயர்ந்தார்.

அன்றிரவு முருகப் பெருமான் அவருடைய கனவில் தோன்றி அவரைப் பார்த்து, அன்பனே அஞ்சாதே அவனை யான் கவனித்துக் கொள்ளுகிறேன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று சொல்லி மறைந்தார்.

இதனால் தைரியம் அடைந்த குணசீலர், பிரதிவாதி பயங்கரனின் தூதனை வெறுங் கையோடு ஒன்றும் சொல்லாது அனுப்பி வைத்தார். குணசீலர் வாதுக்கும் வராம லும் தனக்கு அடிமை என்றும் எழுதித் தராமலும் காலம் கடத்தியதால் பயங்கர னுக்குச் சினம் மூண்டது. குண சீலரை அடக் கத் தனது பரிவாரங்களுடன் பல்லக்கு ஏறித் திருச்செங்கோட்டை நோக்கி விரைந்தான்.

தொலைவில் வரும் போதே திருச்செங் கோட்டின் உயரமான சிகரங்கள் அவனுக் குத் தெரிந்தன. அதைப் பற்றி அவன் நிறையவே கேள்விப்பட்டிருந்தான். அதனைச் சர்ப்ப சயிலம், உரககிரி, நாகா சலம், அரவகிரி என்று பலவாறு புராணங் கள் போற்றுவதை அறிவான். அவனுக்கு அம்மலை பெரிய பாம்பைப் போலத் தோன்றியது.

ஒரு சமயம் ஆதிசேடனுக்கும் வாயுவுக் கும் நடந்த போரில் தோல்வியுற்ற ஆதிசேடனே இங்கு மலையாக நின்றான் என்பது புராணம். அவன் பாம்பாக இருந்தால் படமெடுத்து ஆட வேண்டுமே? அவ்வாறு ஏன்ஆடவில்லை என்ற எண்ணம் அவன் நெஞ்சில் உதயமாயிற்று. அந்தக் கருத்தை வைத்து,

சமரமுகத்திருச் செங்கோடு
சர்ப்ப சயிலமெனில்
அமரின் படம் விரித்தாடாததென்ன?......

என்று பாடலைத் தொடங்கினான். கேள்வி பிறந்து,பாதிப்பாட்டாகி விட்டது. பதில் கொண்ட மீதிப்பாதிப் பாடல் வேண் டுமே. ஒன்றும் தோன்றாமல் யோசித்துக் கொண்டே இருந்தான்.

நேரம் கடந்ததே தவிர பாடல் முடிந்த பாடில்லை.பல்லக்கை நிறுத்தச் சொல்லி இறங்கி ஒரு மரத்தடியில் அமர்ந்து யோசித் தான். அவனுக்குப் பாடலுக்கேற்ற ஒரு பொருளும் கிடைக்கவில்லை. அதனால் பாதிப் பாடலையே திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்த்துச் சோர்ந்தான்.

அப்போது அவனது செவியில், ’அஃதா ய்ந்திலையோ என்று யாரோ சொன்னது போல இருந்தது. குரல் வந்த திசையை நோக்கினான். அங்கு ஒரு மாடு மேய்க்கும் ஒரு சிறுவன் நின்று சிரித்துக் கொண்டி ருந்தான்.

அவனை நோக்கிப் புலவன், ஏன் அப்பா இங்கோ யாரோ புலவர் பாட்டுச் சொன்னார்களே அவர் எங்கே இருக்கிறார் என்றான்?

புலவரே! நீங்கள் தான் பாதிப் பாட்டைத் திரும்பத் திரும்பச் சொல்லி விழித்துக் கொண்டிருந்தீர்கள். நான் மீதிப் பாட்டை முடிக்க உங்களுக்கு உதவலா மென்று அந்த அடியை எடுத்துக் கொடுத் தேன் என்றான் அவன்.

அதைக்கேட்ட புலவன் அலட்சியமாக நீயா பாட்டைப் பாடி முடிப்பாய்" என்று ஏளனத்துடன் கேட்டான் என்றாலும் அவன் உள்ளத்தில் ஆணவம் அடங்கி அச்சம் தோன்றியது.

புன்சிரிப்புடன் அந்த மாட்டுக்காரச் சிறுவன்,

“ ” ,...........................அஃதாய்ந்திலையோ’
நமரன்குறவள்ளி பங்கன் எழுகரை நாட்டுயர்ந்த
குமரன் மயில் வாகனம் கொத்துமென்றே”

என்று சொல்லி அப்பாடலைப் பூர்த்தி செய் தான். பொருள் (இன்னும் தெளிய வில் லையா? நம்மவர்க்கு இனிய குறவள்ளியின் கணவனும் எழுகரை நாட்டிலுள்ளவனு மாகிய முருகனின் மயில் வாகனம் கொத்தும் என்று அஞ்சியே அது ஆடாது இருக்கிறது .)

பாதிப் பாடலை முடிக்கக் கேட்ட பிரதிவாதி பயங்கரன் அச்சம் கொண்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்பனே நீ யாரென்று பணிந்து கேட்டான். அவனுடைய கல்விச் செருக்கும் இறுமாப்பும் போன இடம் தெரியாமல் போய்விட்டன.

சிறுவன் அவனை நோக்கி, ஐயா நான் திருச்செங்கோட்டில் வாழும் குணசீலர் என்பவரிடம் தமிழ் கற்கச் சென்றேன். பல நாள் முயன்றும் அவரால் மந்தமதி கூடிய என்னைப் படிக்கச் செய்ய முடியவில்லை. ஆதலால்,

நீ மாடுமேய்த்துப் பிழைஎன்று சொல்லி விட்டார். குருவின் ஆணைப்படியே " நான் மாடு மேய்க்க வந்துவிட் டேன் என்றாலும் எனது தமிழாசை போகவில்லை," என்றான்.

இதைக்கேட்ட புலவன் மிகவும் அஞ்சி னான். வந்த சுவடு தெரியாமல் ஊருக்குத் திரும்பி விட்டான். அதன்பிறகு அவன் யாரையும் இறுமாப்புடன் துன்புறுத் தவில்லை.

வினாவும் விடையுமாகப் புலவரும் முருகனும் பாடிய அந்தப் பாடல் தனிப் பாடலாக வழங்கி வருகிறது.

இந்த வரலாறு கொங்கு மண்டலச் சதகத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. அந்தப் பாடலை இனிக் காணலாம்.

பெருமைமிகு அரவச் சிலம் பாமெனிற்
பெட்புறும் அவ்
வரவு படம் விரித்தாடாததென்?
என்றகத்துறும் ஓர்
கருவி வெருக்கொள ஆ மேய்ப்பவ
னாகக் கனிந்துதிரு
முருகன் மயில் கொத்தும் என்றெனச்
சொல் கொங்கு மண்டலமே

இதன் பொருள்,பெருமை மிக்க இந்த மலை பாம்பாகும் என்றால் ஏன் அந்தப் பாம்பு ஆடவில்லை என்று பாதிப் பாடல் பாடிய ஒரு கர்வம் மிகுந்த புலவன் அச்சம் கொள்ளும்படியாக முருகன் மாடுமேய்க்கும் சிறுவனாகத் தோன்றி முருகனின் மயில் கொத்தும் என்று அஞ்சி என்று கூறி மீதிப் பாடலைப் பாடிய இடம் இந்தக் கொங்கு மண்டலம் என்பதாகும்.

பழனி மலையில் மயில்கள்

பழனி மலையை வலம் வரும்போது அதன் நான்கு திக்கிலும் நான்கு மயில் மண்டபங்கள் அமைந்துள்ளன. இவற்றில் மலையை நோக்கும் வகையில் 1 மீட்டருக்கும் உயரமான கல்லாலாகிய மயில்கள் அமைந்துள்ளன. இவை கலையழகு மிக்கவையாகும். அருணகிரிநாதர் உக்ரதுரகம் என்று கூறுவதற்கேற்ப வலிய சேணங்கள் பூட்டியவையாக அலங்கரிக்கப்பட்டுள்ளன. சேணத்தில் உள்ள கயிறு, அதன் முடிச்சுகள் மயிலின் கம்பீரமான தோற்றம் ஆகியன கண்ணாறக் கண்டு இன்புறத் தக்கதாகும். மலையின் மீதுள்ள வெளிப் பிரகாரத்திலும் நான்கு திசைகளிலும் நான்கு மயில் மண்டபங்கள் உள்ளன. இத்தகைய அமைப்பை வேறு முருகன் ஆலயங்களில் காண முடியவில்லை. திருவண்ணாமலையைச் சுற்றி வரும் பாதையில் எட்டுத் திசையிலும் நந்தி மண்டபங்கள் இருப்பது இங்கு எண்ணத் தக்கதாகும்.

வேட மயிலும் வேழ மயிலும்

வள்ளி தேவியை வேடமயில் என்றும், தெய்வயானைப் பிராட்டியை வேழ மயில் என்றும் அருணகிரிநாதர் குறிப்பிடுவார். வள்ளிக்கு " மான் மயிற் பாவை" என்பதும் ஒரு பெயராகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயில் தாளம் (மயூர தாளம்)

நடனத்திற்கு அடிப்படை தாளக் கட்டாகும். கணபதி நடனமாடும்போது போடப்படும் தாளத்தை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்ட நூல் கணபதி தாளமாகும். இதேபோல் இடபதாளம் என்ற பாடலும் உள்ளது.

மயில் நடனமாடும் ஜதிகளுக்குக்கேற்ப இயற்றப்பட்டுள்ள நூல் மயூர தாளமாகும், குட முழுக்கு, பெருந்திருவிழா முதலியவற்றின் போது மயூர தாளம் கொன்னாக் கோலாகவும், மத்தளம் அல்லது மிருதங்கத்திலும் இசைக்கப் படுகிறது. இதனைச் சிவாச்சார்யர்கள் தாளமிட்டுப் பாடுகின்றனர். சிவசுப்பிரமணிய மகோற்சவ விதியில் இடம்பெற்றுள்ள மயூர தாளத்தை இங்கே காணலாம்.

பண் –இந்தளம், தாளம் – மயூர தாளம்
நிர்த்தம் – மயூர நிர்த்தம்

வந்தே மயூர தேவாயபஞ்சவர்ண சொரூபிணி
தீக்ஷ்ண துண்டாய சண்டாயபக்ஷிராஜாய நம:

கனக மணி மகுட ஹாரகேயூர பந்தனாம்
ஜனகிரி பர்வ தோபமான குகக்ஷேத்ர கிராம நகர
புரபத்தன கேடக பாஹுல்ய விராஜமான மஹீதல
லலாடே திலகோபசோபமான சுந்தரேஸ்வர தநய
ஸ்ரீசுப்ரமண்ய வாகன மயூர ஸமா கச்சதாம் டுடு

பர்ஹம், பர்ஹம் தன்மரமுதிம் கிரிஜாசுத கேதுகதம்
பஜரே பஜரே ஹ்ருதயமிதம் கரசிஞ்சித மஞ்சுபதம்
சஞ்சல மஞ்சுள துண்டகரம் வ்ர ச்ருங்க ச்ருங்கலம்
ஸ்ருதி தாள புரஸ்தித் பந்துர சம்பிரமிதம்
சித்தபவ, பரிபந்தித புஷ்ப துந்தில மங்க்ரிதம்
அனுமித ஜகது
அகில தனும் சதமகமுக னுதரஞ்சதி சிவசுத
வாகனதானமிதம்

த்ரிசிக சிகமண்டதம் துர்க்க பிச்சான்மிதம்
ஸ்திரதர பதத்வயம் சித்ர விவதான்மிதம்
தீர்க பக்ஷான்மிதம் ஜலதர நிபாங்கதம்
பணி வித்துர்த்த நாசிகம் ச்யாமளாஞ்சஞ்ஜலம்
மணிகண களான்மிதம் கணம்ருத்துள குஞ்சிதம்
கால காலத்மஜம் குகமிதி வவரந்தம் பஜே
குகவஹன பண்டிதம் குண்டலையர் மண்டிதம்
குகமிதி வஹந்தம் பஜே
தத்தத் குஜமிதிள பஜந்தம் பஜே

அருணகிரிநாதசுவாமிகள் மயிலின் ஆட்ட தாளத்திற்கேற்ப திருப்புகழில் பல பாடல் களைப் பாடியுள்ளார். இத்தாரணிக் குள் மனு" என்று தொடங்கும் திருப்புகழ் அதில் குறிப்பிடத்தக்கதாகும். இது மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்க்கையை வரிசைப்படுத்திக் கூறுவ தாகும்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடும்பரிவேல் அணிசேவல் எனப் பாடும் பணியே பணியாய் அருள்வாய்

சேவற் கொடியோன்

தெய்வங்களுக்குரிய தலையாய விருது களில் முதன்மையானது கொடியாகும். கொடியின் பெயரால் சிவபெரு மான் ரிஷப த்வஜன் என்றும், திருமால் கருடக் கொடி யோன் என்றும், மன்மதன் மீனக் கொடி யோன் என்றும் அழைக்கப்படு கின்றனர்.

முருகப் பெருமான் சேவல் பொறித்த கொடியைக் கொண்டிருப்பதால், சேவற் கொடியோன் என்று சிறப்புடன் அழைக்கப் படுகிறார்.முருகப் பெருமானைச் சேவலம் கொடியோன் என்று இலக்கியங்கள் பேசு கின்றன.மலையக மக்கள் சேவற்கொடியை ஏற்றி வைத்து அதையே முருகனாகப் போற்றி வழிபடுகின்றனர்.

முருகன் சேவலை ஏந்தும் செல்வக் குமரனாகத் திருச்செங்கோட்டில் காட்சி யளிக்கிறான். மயிலைப் புகழ்ந்த அளவு க்கு இல்லையென்றாலும் சேவலை யும் போற்றிப் புலவர்கள் பலர் சிற்றிலக்கியங் களைப் பாடியுள்ளனர்

சேவல்" ஓம்" எனும் பிரணவத்தின் வடிவமாகும். இதனை ஞானச் சேவல் எனவும், அழைப்பர். முதல் மலரில் முருக னின் வேலாயுதத்தைப் பற்றி அறிந்த நாம் இந்த இரண்டாம் மலரின் இரண்டாம் பகுதியில் முருகனது கோழிக் கொடியைப் பற்றியும் அதில் இடம்பெற்றுள்ள சேவலின் சிறப்புக்களையும் அறிந்து மகிழலாம்.

இதில்முருகப் பெருமானுக்குக் கோழிக் கொடி தோன்றிய வரலாறு அவனுக்குரிய பலவகையான கோழிக் கொடிகள், கோழி யின் பெருமைகள், கோழியைப் போற்றி அடியவர்கள் பாடிய பாடல்கள், அப் பாடல்களின் வரலாறுகள் ஆகியவை இடம் பெறுகின்றன. செஞ்சேவல் ஏந்தும் செல்வப்பிரான் அருளால் எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழப் பிரார்த் திக்கிறோம்

- சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேவல் பிறந்த வரலாறு

முருகப் பெருமானின் கொடியில் சேவற்கோழி அமைந்துள்ளது. அதைப் பிரண வத்தின் வடிவம் என்றும், ஞானத்தின் வடிவமென்றும் புராணங்களும் இலக்கியங்களும் பலவாறு சிறப்பித்துக் கூறுகின்றன. அந்தச் சேவற் கொடி உண்டான வரலாற்றை விரிவாகக் கீழே காணலாம்

பிரணவச் சேவல்

ஆதியில் முருகன் அநாதியான பிரணவத்தைச் சேவல் உருவம் கொண்டு தமது கொடியில் விளங்குமாறு அருள் பாலித்தார். இதுவே பிரணவச் சேவலாகும்.

சிவபெருமான் அளித்த சேவல்

தேவர்கள் ஒன்றுகூடித் தமக்கு சிறப்பு மிக்க ஒருசேனாதிபதி வேண்டு மென்று சிவபெருமானிடம் கேட்க, அவர் தனது அகங்கார தத்துவத்தால் முருக னைத் தோற்றுவித்து அவரைத் தேவர்களின் சேனாதிபதியாக்கினார்.

பின்னர் அவருக்குத் துணையாகச் சாகன், விசாகன் என்ற தோழர்களையும், ஒரு சேவலையும் படைத்தளித்தார் என்று வராக புராணம் கூறுகிறது. அவ்வாறு அளிக்கப்பட்ட நாள் ஷஷ்டி திதி என்றும், இதில் விரதம் இருக்க வேண்டும் என்றும் அது கூறுகிறது.

வள்ளியின் சீதனமான சேவல்

முருகப்பெருமான் வள்ளியை மணந்த போது. அவள் பிறந்த வேட்டுவக் குடியினர் அவளுக்கு ஐந்து பொருள்களைச் சீதன மாகக் கொடுத்தனர். அவை ஊது கொம்பு சேவல் கொடி, வேல் மயில், மலையாட்சி என்பனவாம்.

சூரியன் அளித்த சேவல்

முருகனுக்குப் போரில் உதவியாக இருக்க அருணன் எனும் சூரியன் தமது புதல்வனான தாம்பரசூடன் என்பவனை அளித்தான். அவன் கோழி வடிவுடன் இருந்தான்என்றுவாமனபுராணம் கூறு கிறது.

அக்னிச் சேவல்

சமய உலகில் தருமத்தின் குறியீடாகக் காளையும், வீரத்தின் அடையாளமாகச் சிங்கமும், மந்தம், சோம்பல் ஆகியவற்றின் அடையாளமாக எருமையும் கொள்ளப் பட்டுள்ளன. போலவே நெருப்பின் குறியீ டாகச் சொல்லப்பட்டுள்ளது சேவற் கோழி யாகும்.

அக்னி பகவானே முருகனின் கொடி யில் சேவலின் வடிவமாக விளங்குகின்றான் என்று கந்தபுராணம் கூறும். அந்த வரலாற் றினைக் கீழே காணலாம்.

திருச்செந்தூரில் நடைபெற்ற போரில் சூரபத்மனோடு போர் புரிய முருகன் வலிய தேர்மீது ஏறி மகா உருத்திரனைப் போல விளங்கினார். அவருடைய தேரில் வெற் றிக் கொடியில்லாததைக் கண்ட தேவர்கள், அக்னியை நோக்கி, நமது குமாரனின் தேரில் கொடியில்லை எனவே நீகோழிக் கொடி யாக அங்கு விளங்குவாய்' என்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனும் வலிய உருவம் த்தாங்கி முருகனின் தேர்மீது கொடியாக நின்றான். பின்னர் தனது இடி போன்ற குரலால் அண்டங்கள் வெடிக்கும்படிப் பெருங் குரலெடுத்துக் கூவினான். அதைக் கேட்டு அசுரக் கூட்டங்கள் நடுநடுங்கின என்று கந்தபுராண யுத்தப் படலம் கூறுகின்றது.

அக்கினியாகி சேவல் எழுப்பிய கடுங் குரலால் சூரியனும் ஏழுநிலங்களும் எட்டுத் திசை யானைகளும் இடர்ப்பட்டு வருந்தின என்று அருணகிரிநாதர் வேடிச்சி காவலன் வகுப்பில் குறிப்பிடுகின்றார்.

பத்துப் பாட்டில் ஒன்றான பரிபாடலின் ஐந்தாம் பாடலில் அக்னி தன் உடலில் இருந்து கோழியை தோற்றுவித்து முருகனுக்குக் கொடுத்தான் என்று கூறப்பட்டுள்ளது. அக்னி யிடமிருந்து தோன்றியதால் அதற்குத் தீ மதலை என்பது பெயராயிற்று.(மதலை - குழந்தை)

" பிரணவம்' என்பது ஓர் இடமாகவும், அங்கு பக்குவம் பெற்ற ஆன்மாக்கள் சேவலாக விளங்கும் என்பது இரண்டாவது வகை கருத்தாகும்.இவ்வகையில் கடுந்தவம் புரிந்து முருகன் அருள்பெற்ற ஆன்மாக்கள் மயிலா கவும் சேவலாகவும் மாறி பிரணவ லோகத்தில் விளங்குகின்றன.

அசுரச் சேவல்கள்

கந்தபுராணத்தில் சூரன், பதுமன் என்ப வர்கள் கடுந்தவம் புரிந்து சூரபத்மன் எனும் ஓர் அசுர வடிவமாகி தவம் செய்து பெருவரங்கள் பெற்று 1008 அண்டங்களை 108 யுகங்கள் ஆண்டனர்.

இறுதியில் அவர்கள் முருகனால் வெல்லப்பட்டு மயிலும் சேவலுமாக ஆக அவர்களை முருகன் ஏற்றுக் கொண்டது ஆகியசெய்திகள் விவரமாக விளக்கப்பட்டுள்ளன. சூரன், பதுமன் என்பவர்களில் பதுமன் சேவலாக விளங்குகிறான் என்பதால், இது பதுமச் சேவல் அல்லது அசுரச் சேவல் எனப்படும்.

இந்தச் சேவலின் பராக்கிரமத்தைத் திருப்புகழும் திருவகுப்புகளும் தனிச் சிறப்புடன் கூறுகின்றன.

முருகன் திருவடிவில் இடம் பெறும் சேவற்கொடி

ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரியதாகக் கொடிகள் இருந்தாலும்,அத்தெய்வங்களுக்கு அமைக்கப்படும் திருவுருவங்களில் அவற்றை அமைப்பதில்லை. முருகன் மட்டுமே சேவற் கொடியை ஏந்தியவனாகவே காட்டப்படுகிறான். இயல்பாக அவன் வடிவில் கொடியில்லாவிட்டாலும்அதனைத் தங்கம், வெள்ளி ஆகியவற்றால் செய்து அலங்கரிக்கின்றனர்.

வலதுகைபக்கம் வேலும், இடதுகை பக்கம் கோழிக் கொடியும் இடம் பெறுகின்றன.

வேல் சேவல்கொடியுடன் முருகப்பெருமான்

சில ஆலயங்களில் விலை யுயர்ந்த கற்கள் இழைத்துச் செய்யப்பட்ட கோழிக் கொடிகள் உள்ளன. இக்கொடியில் அமையும் கோழியானது முருகனின் திருச் செவியை நோக்கி நின்றவாறு பிரணவத்தை ஓயாது கூவிக் கொண்டிருக்கின்றது என்பர். சிவபெருமானுக்கு முருகன் பிரணவத்தின் விளக்கத்தை இருசெவிகளிலும் கூறினான். அதுபோல் முருகனுடைய திருச்செவியிலே இந்தச் சேவல் பிரணவத்தினை ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கின்றது என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்பர்கள் கொண்டாடும்சேவற்கொடி

கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் மட்டுமே முருகனுக்குரிய கொடி மரத்தில் மயிலை எழுதிக் கொடியேற்றும் வழக்கம் உள்ளது. ஆனால், சமயச் சான்றோர் கள் நடத்தும் முருகன் விழாக்களில் சேவற்கொடியை ஏற்றும் வழக்கமேயுள்ளது. வெள்ளை அல்லது மஞ்சள் துணியில் நீலம் அல்லது சிவப்பு வண்ணத்தில் கோழியின் வடிவத்தை எழுதி கொடியேற்றுகின்றனர்.

ஞானச் சூரிய உதயமும் ஞானச்சேவல் கூவுதலும்

சூரியன், சந்திரன், பூமி , நீர், தீ, காற்று, ஆகாயம், ஆன்மா என்பன சுப்பிரமணியப் பெருமானின் எட்டு வடிவங்கள் ஆகும். இதில் சூரிய வடிவாக விளங்கும் முருகனுக்கு ஷண்முகர் என்பது பெயர்

விடியற்காலையில் சூரியன் கடலின் மீது உதிக்கின்ற காட்சி மயில் மீது வரும் முருக னைப் போல இருக்கின்றது என்று நக்கீரரின் திருமுருகாற்றுப்படை போற்றி அதிசயிக்கிறது.

நீலக்கடல் நீல மயிலின் உடல் போல் பரந்து கிடக்கின்றது.வானம் அதன் தோகை யைப்போல நீலமாக விரிந்திருக்கிறது. செம்மையாக ஒளிரும் விடியற்காலைக் கதிரவன் செய்யோனாகிய முருகப் பெருமா னை நினைவூட்டுகின்றான்.

சங்கத் தமிழ் இலக்கியமான பரிபாட லின் 18ஆம் பாடல் முருகனை மயில் மேல் வரும் சூரியனே என்று விளிப்பதும், இங்கு நோக்கத் தக்கது.கண்கண்ட தெய்வமாக விளங் கும் சூரியனின் உதயத்தை நாட்டுச் சேவலின் கூவல்கள் உணர்த்துகின்றன. ஞான மயமான சுப்பிரமணிய சூரியன் ஆன்மாவில் உதயமாவதை ஞானச் சேவல் கூவி உணர்த்துகிறது. ஆனந்த மயமான நீல மயிலில் செங்கதிரோனாகிய சுப்பிரமணியன் உதயமாகிறான்.

இலக்கிய மரபில் காலைச் சூரியனை முருகப்பெருமானாகவும், பகல் சூரியனைத் திருமாலாகவும், மாலைச் சூரியனைச் சிவபெருமானாகவும் கூறுவது மரபு. இதைக் குறிக்கும் பழம் பாடல் ஒன்றும் உள்ளது. அது........

காலைக்கடல் செவ்வான் காட்டும் சிவமுருகன்
வேலை முக்கூறும் பகல் மேவுமால் - மாலைச் செவ்வான்
வைகு சிவன் மேகம் வளர்சடை மேற்றிங்கள் தோய்
மைமுகில் நீராவி கங்கை மற்று

என்பதாகும்.சேவலின் குரல் ஆன்மாவை விழிப்புறச் செய்கிறது. முன்னமே குறித்தபடி பறவைகளின் குரலில் சேவலின் குரலுக்கு மட்டுமே இறைவனின் பெயரையும் வீரத்தையும் பிரணவத்தையும் இணைத்துப் பொருள் கூறுமளவிற்குப் பொருத்தம் உள்ளது என்பது அறிந்து இன்புறத் தக்கதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருணகிரிநாதர் காட்டும் அபயம் அளிக்கும் சேவல்

செவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு
செவிக்குன்ற வாரணம் அஞ்சல் என்றாண்டது நீண்ட கன்மச்
செவிக்குன்ற வாரண வேலாயுத செற்ற துற்றனகட்
செவிக்குன்ற வாரண வள்ளி பொற்றாள் மற்று என் தேடுவதே

-- கந்தர் அந்தாதி (26)

இதன் பொருள் நாக மலை எனும் திருச்செங்கோட்டு மலையில் வாழும் கந்தசுவாமியின் உனது திருப்புகழைக் கேட்ட மாத்திரத்தில் உனது கொடியில் உள்ள கோழி என் ஆத்மாவிற்கு அஞ்சேல் என்று அபயம் கொடுத்தது. உன் வேலாயுதம் என் பிறவிக்குக் காரணமான ஆசைகளை அழித்துவிட்டது. உனது தேவியரான வள்ளி, தெய்வயானை பிராட்டியரின் திருவடிகளும் கிடைத்துவிட்டன. இனி யான் தேட வேண்டியது என்ன இருக்கின்றது. எதுவும் இல்லை என்பதாகும்.

வள்ளிமலைத் திருப்புகழ் சுவாமிகள் தமது மானச பூசை பாராயண நூலில் பூரண அருள் பெறுவதற்கு இப்பாடலைச் சான்றாகக் காட்டியுள்ளார்.

சேவல், முருக பக்தனின் ஆன்மாவிற்கு அபயமளிப்பதை இப்பாடல் குறிக்கின்றது.

கடுங்குரல் சேவல்

முருகன் சூரபத்மனைச் சங்கரித்து அசுரர்களை அழித்து தேவர்களுக்கு இந்திர லோகத்தை மீட்டுத் தந்தார். பின்னர் தேவேந்திரனின் மகளான தெய்வயானை யை மணந்து, திருத்தணிகையில் விருப்ப மொடு தங்கினார்.

நாரதமகாமுனிவர் மூலமாக வள்ளி மலையில் தம்மை நோக்கித் தவம் செய்யும் வள்ளியம்மையைக் கண்டு காதல் கொண் டார். அவளை அவளுடைய சுற்றத் தினர்க்கு அறிவிக்காமல் கடிமணம் புரிந்து சோலை மலை யில் எழுந்தருளினார்.

தன் மகளை முருகன் களவு செய்து கொண்டு செல்வதை அறிந்த வள்ளியின் வளர்ப்புத் தந்தையாகிய நம்பிராஜனும் அவனுடைய சுற்றத்தினரும் முருகனோடு போர் புரிய வந்தனர். வள்ளி செய்வதறி யாது அஞ்சினாள். ஆனால், முருகனின் கொடியிலிருந்த சேவல் உரத்துக் கூவியது. அதனுடைய ஒலித் தாக்கு தலால் வேடுவர் அனைவரும் வீழ்ந்து இறந்தனர். இதைக் கண்ட நாரதர் முருகனிடம் வள்ளியின் சுற்றத்தினரை அழிப்பது தகாது. அவர் களை உயிர்ப்பித்து அவர்களுடைய ஒப்பு தலின் பேரில் திருமணம் செய்து கொள் வது தான் முறை வேண்டும் என்றார்.

அதன்படியே முருகன் வள்ளியம் மைக் குத் தன் அருளாற்றலை வழங்க, அவள் அனைவரையும் தன் அருளாற்றலால் உயிர்ப்பித்தாள். அவர்கள் முருகனை வணங்கி அவனுக்கு முறைப்படி வள்ளி யைத் திருமணம் செய்து கொடுத்தார்கள்.

இதன் முலம் சேவலானது முருகனுக் கும் அவனுடைய அடியவர்க்கும் ஒரு கேடு வரு மானால் தன் குரலாலேயே அவற்றை அழித் தொழிக்கும் என்று தெரிகிறது.

சூரபத்மனோடு முருகன் செய்த போரில் அக்னிச் சேவலின் கடுங்குரல் கேட்டு, அசுரப்படைகள் கலங்கியதும் எட்டுத் திக்குகளும் அதிர்ந்ததையும் காண சேவலின் ஆற்றலை மிஞ்சுவது எதுவு மில்லை என்பது உறுதியாகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேவல் தாங்கும் செல்வக்குமரன்

தெய்வங்கள் உயிர்களின் மீது கொண்டுள்ள அன்பையும் அருளையும் தெரிவிப்பதற்காகப் பறவைகளையும் விலங்குக ளையும் ஏந்துகின்றனர். மீனாட்சியின் கரத்தில் பச்சைப் பசுங்கிளி தவழ்கிறது. சிவபெருமான் மான்குட்டியை ஏந்துகின்றார். சியாமளா தேவி கிளியுடன் குயிலையும் கொண்டிருக்கின்றாள்.

இதுபோலவே முருகன் கோழியை ஏந்தி இருக்கிறார். குமார தந்திரம் கூறும் அக்னி ஜாதர், காங்கேயன் முதலிய வடி வங்களின் திருக்கரத்தில் கோழி காணப்படுகிறது. முருகன் கஜவாகனர் எனப்படும் வாரண வாகனர் திருவுருவத்தில் கோழியையும் சக்தியை யும் ஏந்தியிருக்கிறார்.

கும்பகோணத்தை அடுத்துள்ள தாராசுரம் ஐராவ தேசுவரர் ஆலயத்திலுள்ள முருகன் உலாத் திருமேனி மேற்கரத்தில் கோழி யைக் கொண்டுள்ளது முருகன் அன்பர்களைக் காக்க சேவலுடன் வருவதாக அருணகிரிநாதர் குறிப்பிடுவார். அவர் அருளிய திருச்செங்கோடு திருப்புகழில்,

சென்றே இடங்கள் கந்தா எனும்பொ
செஞ்சேவல் கொண்டு வர வேணும்' '
" "செஞ்சாலி கஞ்சம் ஒன்றய் வளர்ந்த
செங்கோடமர்ந்த பெருமாளே

என்று பாடியருள்கின்றார். இதற்கேற்பத் திருச்செங்கோட்டு வேலவன் வலக்கையில் வேலேந்தியும் இடையில் வைத்த இடக் கையில் கோழியுடனும் அருள்பாலிக்கின்றார். மேலும், கொல்லி மலை முதலிய சிற்சில தலங்களிலும் சேவலோடு நின்றருளும் முருகனைக் க்ண்டு மகிழலாம்.

சேவல் காவடிகள்

பால் காவடி, பன்னீர்க் காவடிகள், புஷ்பகாவடிகள் போலவே சேவலையும் காவடிகளில் கட்டி முருகனுக்குச் செலுத்துவது ஒரு வழக்கமாகும். இவை சேவற்காவடிகள் என்றழைக்கப் படுகின்றன.பக்தி மிக்கோர் முருகன் மீது ஆணையிட்டுச் சேவலை அரிந்து அதனைக் காவடியில் கட்டி முருகன் சந்நிதிக்கு எடுத்துச் சென்று செலுத்தி வழிபடுவர். அங்கே அவை உயிர் பெற்றெழுந்து கூவிய அதிசயம் பழனி மலையில் ஏராளமாக நடந்த தென்று வரலாறுகள் கூறுகின்றன.

சேவல் விடுதல்- சிறுதெய்வ ஆலயங்களில் ஆடுகள்,கோழிகள் ஆகியவற்றை நேர்த்திக் கடனுக்காக அளிப்பது நெடுங்காலத்து வழக்கமாகும். முருகன் ஆலயங்களுக்கு சேவல்கள் அளிக்கப் படுகின்றன. சென்னை காரணீசுவரர் ஆலயத்தில் நேர்த்திக் கடனாக விடப்பட்ட சேவல் ஒன்று சுதந்திரமாகச் சுற்றி வந்தது. கோயிலில் எப்போதும் சுற்றிக் கொண்டிருக்கும் இச்சேவலை தெய்வீகச் சேவல் என்று மக்கள் போற்றினர். ஏறத்தாழ மூன்றாண்டு காலமாக இக்கோயிலில் அந்தச் சேவல் இருந்து வந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேவலைப் போற்றும் திருப்பாடல்கள்

அடியவர்களும் கவிஞர்களும் வேல், மயில், சேவல் ஆகிய மூன்றையும் இணைத்தே பாடுவது மரபாகும் என்றாலும், மயில், வேல் ஆகியவற்றைப் புகழ்ந்து பாடிய அளவுக்குச் சேவலைப் பற்றிப் பாடவில்லை. சேவலைப் புகழும் பாடல்கள் குறைந்த அளவே என்றாலும், அவை தனிச்சிறப்புடன் திகழ்கின்றன. அவற்றுள் சிலவற்றை இங்குக் காணலாம்.

சேவல் விருத்தம்

அருணகிரிநாத சுவாமிகள் வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் ஆகியவற்றை அருளிச் செய்துள்ளார். இவற்றில் வேல் விருத்தம், மயில் விருத்தம் ஆகியவை முழுமையாகக் கிடைத்ததால் பலர் அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள். சேவல் விருத்தம் ஓலைச்சுவடி அதிகம் சிதைந்து காணப்பட்டதால், அதனை யாரும் பதிப்பிக்கவில்லை. டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகத்தில் இருந்த சேவல் விருத்தச் சுவடியைத் தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளை அவர்கள் பெற்றுச் சிதைந்திருந்த அதன் பகுதிகளைச் செப்பனிட்டு தமது முருகவேள் பன்னிரு திருமுறையில் பதிப்பித்துள்ளார். இதில் 5வது பாடலைக் கீழே காணலாம்.

இப்பாடல்களைப் படிப்பதால், பூத, பேய், பிசாசுகளின் சேட்டைகள் விலகும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இதில் பதினோரு பாடல்கள் உள்ளன. இவை சேவற்கொடியைப் பரவும் வகையில் " சேவல் திருத்துவசமே' ' என்ற அடிகளைக் கொண்டுள்ளன.

தானாய் இடும்பு செயும் மோகினி இடாகினி
தரித்த வேதாள பூதம்
சருவ சூனியமும் அங்கிரியினால் உதறித்
தடிந்து சந்தோடம் உறவே
கோனாகி மகவானும் வானாள வானாடர்
குலவுசிறை மீள அட்ட
குலகிரிகள் அசுரர்கிளை பொடியாக வெஞ்சிறைகள்
கொட்டி யெட்டிக் கூவுமாம்
மானாகம் அக்கறுகு மானுடையவன் நர்த்தமிடு
மாதேவன் நற்குருபரன்
வானீரம்(ம் அவ) னியழல் காலாய் நவக்கிரகம்
வாழ்நாள் அனைத்தும் அவனாம்
சேனா பதித்தலைவன் வேதாவினைச் சிறைசெய்
தேவாதி கட்குஅரசுகள்
தேனான மைக்கடலின் மீனான வற்கினியன்
சேவல் திருத் துவசமே.

சேவலின் பல்வேறு பெயர்கள்
குக்குடம்,
சேவல்,
வாரணம்,
கோழி,
குருகு,
ஆண்தலைப்புள்,
காலாயுதம்
சரணாயுதம்
ஆகியன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அலங்காரம் காட்டும் சேவலின் ஆற்றல்

படைபட்ட வேலவன்பால் வந்த வாகைப் பதாகையென்னும்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ள சலதிகிழிந்" து
உடைபட்டது அண்ட கடாகம் உதிர்ந்தது உடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேரு வெற்பும் இடிபட்டவே. - கந்தர் அலங்காரம் (12)

பொருள் :முருகனின் வெற்றியைத் தரும் கொடியில் உள்ள சேவல் தனது வலிய சிறகுகளை அடித்துக் கொள்ள, இந்த கடல் கிழிந்து, பொங்கியது. அண்டத்தின் ஓடு உடைந்து, நட்சத்திரக் கூட்டங்கள் உதிர்ந்துவிட்டன.இடையில் உள்ள குன்றுகள் மேருமலை முதலான மலைகள் பொடிப்பொடியாகச் சிதறிவிட்டன என்பதாகும்.

குக்குட பந்தம்

குமார மஞ்சரியின் முதல் இதழில் வேல்பந்தத்தையும், இந்த இதழில் மயில் பந்தத்தையும் சித்திரக் கவிகளாகக் கண்டோம். இவை இரண்டும் முருகன் மீது பாடப்பெற்றவைகளாகும். இவ்வகையில் முருகனைக் குறித்து சேவல் பந்தம் எனும் சித்திரக் கவியை யாரும் பாடியதாகத் தெரியவில்லை.

சைவ சமயச் சண்டமாருதம் புலவர் பி.மா. சோமசுந்தரனார் அவர்கள் முருகனடியாரான பாம்பன் சுவாமிகள் மீது அவரை வணங்கிப் போற்றும் வகையில் ஒரு குக்குடபந்தத்தைப் பாடியுள்ளார்.

அது வருமாறு.....

வேதத்தின் வாய்மை விரித்தியல் புங்கவனே
நீதத்தியல் பாம்ப னித்தனே – நாதங்
கடல்தொளிற் கந்தனென்று ரைக்க வரு வள்ளான்
மிடல் கொணின்கீழ் தித்தித்த வே..

கோழிப் போரும் - கோழியூர்களும்;

முருகன் போர்த் தெய்வமாகப் போற்றப்படுகின்றான். அவனுடைய சேவல் போர்க் குணம் மிக்கதாக விளங்குகிறது. சேவற்கோழி சண்டை நடக்குமிடங்களில் முருகன் உறைகிறான் என்பது நாட்டுப்புற நம்பிக்கையாகும்.

போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுக்கப்பட்டது போல, சேவற்போரில் இறந்துபட்ட கோழிகளுக்கும் நடுகல் எடுக்கப்பட்டது. இத்தகைய கோழி உருவம் கொண்ட நடுகல் ஒன்று செங்கை மாவட்டம் அச்சிறுபாக்கத்தை அடுத்த இந்தளூர் எனும் ஊரில் உள்ளது.

கோழிகளின் பெயரால் பல ஊர்கள் அமைந்துள்ளன. குறுங்கோழியூர், பெருங் கோழியூர், கோழிப்பாக்கம், கோழிக்குத்தி முதலியனவாகும்புராணங்கள் கூறுவதுபோல முருகப் பெருமானைப் பல ஊர்களில் மயில் பூஜை செய்தது போல இவ்வூர்களில் கோழிகள் பூஜை செய்யவில்லை என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முட்டை எனப் பெயர் பூண்ட முருகன்



கோழி என்றதும் நமக்கு அதனுடன் அதன் முட்டையும் நினைவுக்கு வருவது இயற்கை. ஒரு சமயம் முருகப் பெருமான் முட்டை என்ற பெயர் தாங்கி ஒரு கவிஞனுக்கு அருள்பாலித்த வரலாற்றைக் காணலாம்.

சோழநாட்டிலுள்ள துறையூர் எனும் ஊரில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றி மிகுந்த கல்விச் செல்வம் படைத்தவராக சிவகவி என்ற புலவர் வாழ்ந்து வந்தார். இவரைப் பொய்யா மொழிப் புலவர் என்று கூறுவர்.

எல்லையற்ற சிவபக்தி உடையவரான இவர் சிவ பெருமானையன்றி வேறு எந்த தெய்வத்தையும் பாடாதவர்.

ஒரு சமயம் முருகன் மீது அன்பு கொண்ட ஒரு அன்பர் அவரிடம் சென்று, ஐயா முருகன் தமிழ்த் தெய்வமல்லவா? அவன்மீது தங்கள் ஒரு பிரபந்தம் பாடியருள வேண்டுமென்று பணிந்து கேட்டார். அதைக் கேட்ட பொய்யா மொழிப் புலவர், " சிவ சிவ" என்ன இது. எனது நாக்கு சிவ பெருமானைப் பாடுமேயன்றிப் பிறதெய்வங்களைப் பாடாது அதுவும் செஞ்சேவலாகிய சிவபெருமானுக்கு ஒரு குஞ்சாகிய முருகனைப் பாடவே பாடாது' கோழியைப் பாடும் வாயால் குஞ்சினைப் பாடுவேனோ' என்று கூறினார்.

முருகபக்தர் உள்ளம் வருந்தினார். புலவர் முருகப் பெருமானை ஒரு கோழிக்குஞ்சு என்று உவமித்துச் சொன்னது அவரை மிகவும் பாதித்தது. அவர் முருகன் ஆலயத்துள் சென்று முருகனிடம் புலவரின் அகங்காரத்தைப் போக்கியருள வேண்டுமென்று மன்றாடினார்.

அவர் கனவில் முருகன் தோன்றி, அன்பனே! நீ வருந்தாதே அந்தப் புலவருக்கு உரிய காலத்தில் புத்தி புகட்டுவோம். வேளை வந்தால்,அவர் நாக்கு குஞ்சையும் பாடும் கூழுக்கும் பாடும் என்று சொல்லி மறைந்தார்.

சில நாட்கள் சென்றன. புலவர், தஞ்சாவூரிலிருந்த சந்திரவாணன் என்ற அரசனைத் தரிசிக்கச் சென்றார். அந்த மன்னனின் எல்லையற்ற சிவபக்தியைக் கண்டு வியந்தார். அடியவரைப் போற்றுவதும் அரன்பணியே என்று அவன்மீது' தஞ்சைவாணன்' கோவை என்ற நூலைப் பாடினார். அவன் அதனைக் கேட்டு அவரைப் பலவாறு சிறப்பித்தான். அவர் அவனிடம் நிறைந்த பரிசுகளைப் பெற்று ஊர் திரும்பினார்.

நடுவில் ஒருசுரத்தின் (பாலை நிலத்தின்) வழியே செல்ல நேர்ந்தது. அப்போது அவரைத் திருத்த உள்ளம் கொண்ட முருகன் ஒரு வேடுவனாகத் தோன்றினான்.புலவரை நோக்கி, நில்!நில்! என்று அதட்டினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதைக் கேட்ட புலவர் அஞ்சி நின்றார்.

அவரை நோக்கி, யார் நீ எங்கு செல்கின்றாய் என்றான். அந்த வேடுவன் அச்சத்தால் புலவருக்கு நாக்கு குழறியது.

ஐயா, நான் புலவன் என்று தட்டுத் தடுமாறி பதில் கூறினார்.

வேடன் அதைக் கேட்டு இடிபோலச் சிரித்தான். புலவன் என்ற பெயர் குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகனுக்கே உரியதன்றோ?அது சில சமயம் அவனருள் பெற்ற அடியவர்க்கும் பொருந்தும்.

நீ புலவன் என்பது எமக்கு வியப்பாக இருக்கின்றது. பரவாயில்லை உனக்குப் பாட வருமா? சொல் என்றார்.

வேடனின் இந்தப் பேச்சைக் கேட்ட புலவர் மனம் தேறினார். இந்த வேடன் நல்ல தமிழ் அறிந்தவனாக இருக்கின்றான். இவனால் நமது உயிருக்கு ஆபத்தில்லை என்று தெளிந்தார். ஐயனே பாடுவேன் என்றார்.

அப்படியானால், என் பெயரும், இந்த பாலை நிலமும், இதற்குரிய அகத்துறை யான சுரம் போக்குத் துறையும் அமையும்படி பொன் போல் என்று தொடங்கிப் பாடுக என்றார். புலவர் ஐயனே, உன் பெயர் என்ன என்றார். வேடனான குமரன் புன்னகைத்து ஏன் பெயர் முட்டை என்றார். புலவர் உடனே,

" பொன்போலும் கள்ளிப்
பொறி பறக்கும் கானலிலே
யென்பேதை செல்லற்கு
இசைந்தனளே– மின்போலு
மானவேல் முட்டைக்கு
மாறாய தெவ்வர் போன்
கானவேல் முட்டைக்கும் காடு" "

என்றபாடலைப் பாடினார். இதைக் கேட்ட முருகன் புன்முறுவர் பூத்தார். ஐயா, புலவரே! பாடல் நன்றாக ஆக்கியுள்ளீர். ஆனால், பொருட் குற்றம் மலிந்துள்ளது என்றார். புலவர் அதைக் கேட்டு நடுங்கினார்.

முருகன், ஐயா எளிதில் பற்றாத பாலுள்ள பச்சைக் கள்ளியானது பொறி பறந்து எரியும் காட்டில் சிறிய நெருப்பு பற்றினாலும் தீய்ந்து போகின்ற வேலமுள் எப்படி எரியாமல் இருந்து காலில் குத்தும். இப்படிப் பொருள் குற்றம் வரும்படிப் பாடுவதுதான் பொய்யா மொழிக்கழகா? உம் பெயர் வரும்படிப் பாடல் பாடுகின்றேன். இதில் குற்றம் இருந்தால் காட்டுக என்று சொல்லி,

" விழுந்த துளி அந்தரத்த வேமென்றும்
வீழி னெழுந்த சுடர்சுடும் என்றும்
– செழுங்கொண்டர்
பெய்யாத கானகத்தில்
பெய்வளையும் சென்றனளே
பொய்யா மொழிப் பகைஞர் போல்" "

எனும் பாடலைப் பாடினார்.

இதைக்கேட்ட பொய்யா மொழிப் புலவர் நாணித் தலைகவிழ்ந்தார். வேடனின் காலில் வீழ்ந்து அருளும்படி வேண்டி னார். புலவரின் வருத்தத்தினை உணர்ந்து முருகன் தனது வேட வடிவம் நீக்கி உண்மை வடிவுடன் காட்சியளித்தார். அவரை நோக்கி, அன்பனே! முன்னொரு நாள் எனது அன்பன் கேட்டபோது, நீ கோழியைப் பாடிய வாயால் குஞ்சினைப் பாடோம் என்றாயே? இப்போது நீ முட்டையை அல்லவா பாடினாய்? என்றுசொல்லிச் சிரித்துப் புலவனே, சிவபெருமானும் சக்தியும் நாமும் வேறல்ல? மூவரும் ஒருவரே என்று உணர்த்தினார்.

அதன்பிறகு பொய்யாமொழிப் புலவர் தவம் செய்து அகத்தியரைக் குருவாக அடைந்து அவர் அருளால் குகலோகம் சென்றார் என்பர்.

முட்டை என்று பெயர் தாங்கி அருள் பாலித்ததால் முருகனுக்கு முட்டை பெயர்க் குமார மூர்த்தி என்பது பெயராயிற்று.

இதனைப் பட்டினத்துப்பிள்ளையார் புராணம், புலவர் புராணம் முதலியவற்றால் அறியலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னிரு பக்கங்களில் உள்ள பாடல்களுக்கான இலக்கிய அறிமுகம்

தமிழ் இலக்கியத்தின் அறிமுகம் இருந் தால்தான் மேற்கண்ட பாடல்களின் விளக்கத்தை அறிந்து கொள்ள முடியும்.

இலக்கிய சுவையை அறிவதும் முருகனை அறிவதும் ஒன்றே. எனவே அன்பர்களுக்குத் தமிழ் இலக்கியத்தில் மேற்காணும் பகுதி இங்கு விளக்கமுறக் கூறப்படுகின்றது.

தமிழர் காதலை விளக்கிச் சொல்ல ஐந்து வகையான நிலங்களையும் அவற்றில் பாட வேண்டிய முறைகளையும் ஒவ்வொன்றிலும் எடுத்தாள வேண்டிய காட்சிப் பொருள்களையும் விளக்கமாக இலக்கணத்தில் கூறியுள்ளனர். இவை அன்பின் ஐந்திணை எனப்படும். காதல ர்கள் கூடி மகிழ்வது குறிஞ்சித் திணை என்றும், காதலர்கள் பிரிந்து வருந்துவது நெய்தல் திணை யென்றும் பலவாறு வகைப்படுத் தியுள் ளனர்.

மேற்கண்ட பாடல் பாலைத் திணையை யும் அதில் சுரம் போக்கு எனும் துறைய்யயும் சேர்ந்தது.

மிகவும் அன்புடன் ஒருத்தி மகளை வளர்க் கின்றாள். மகள் உரியபருவத்தில் ஒருவனைக் காதலித்து, கணவனாக ஏற்றுக்கொண்டு, தாய்க்கும் சுற்றத்தாருக்கும் அறிவிக்காமல் காதலனொடு சென்று விடுகின்றாள் .அப்பெண் கொடிய பாலை வனத்தின் வழியே தன்னுடைய காதலனுடன் சென்றதை அறிந்த அந்தத் தாய் வருந்துகின்றாள். அவள் மகளுக்காக இரங்கிப் பாடியதே இப்பாட லாகும்.

இதன் பொருள்

கொடிய பாலைவனத்தில் கடுங்கோடை யின் சூரிய வெப்பத்தைத் தாங்காது கள்ளிச் செடிகள் தீப்பற்றி தங்கத்துகள் போல் மின்னி எரிந்து கொண்டிருக்கின்றன.அப்படி எரிவதால் உண்டாகும் நெருப்புப் பொறிகள் விண்ணில் சிதறிக் கொண்டிருக்கின்றன. அத்தகு கொடிய பாலை வனத்தின் வழியே என்னுடைய பேதைப் பருவம் கடந்திடாத பெண், அவளுடைய காதல னுடன் செல்லுதற்கு இசைந்து சென்றாளே அவள் செல்லும் காடு கொடுமையானது அது வானத்தில் தோன்றும் மின்னல் போன்ற தன்மானமும் மிகவும் பெருமையும் கொண்ட முட்டை என்பவனுடன் இணங்காத அவனது எதிரிகள் மறைந்து ஓடுகின்ற கானல்நீர் தோன்றும் காடு என்பதாகும்.

அக்காட்டில் பகைவர்கள் ஓடும்போது கரு வேல முட்கள் இருந்து குத்தி வருத்தும் என்பதா கும். மகள் செல்லும் காடு வெப்பமானது முட்கள் குத்தி வருத்துவது என்பதாகும்.

இப்பாடலில் முருகன் பொருட்குற்றம் என்றும், முன்னுக்குப் பின்முரணாக உள்ள தென்றும் கூறினான். அது என்ன வென்றால் சூரியவெப்பம் தாக்கி பாலுள்ளதும் எளிதில் தீப்பற்றாததுமான கள்ளிச் செடிகளே பொன் போல எரிந்து கொண்டிருக்கின்றன. அப்படி யிருக்கையில் சிறிய நெருப்பு பட்டாலே கரிந்து போகின்ற வேலமுள் எப்படி அந்தக் காட்டில் எரியாமல் இருக்கும். அவை இருந்தாலல்லவோ காலில் குத்தும்.

இதையடுத்து முருகன் பாடிய பாட்டின் பொருள் :

கடுங்கோடை வெப்பத்தால் மண் கொதித் துக் கொண்டிருக்கிறது. அந்த வழியாக வானில் செல்லும் மேகங்கள் வெப்பத்தைத் தணிக்க மழைத்துளிகளைப்பொழிகிறது. மழைத்துளிகள் பூமியில் வீழ்ந்தால் சுடுமென்று அஞ்சி ஓடுகிறது. அப்படிப்பட்ட மழையைக் கண்டறியாத கொடும் மணற்(பாலை)க் காட்டில் எனது பெண் எவ்வாறு சென்றாள். பொய்யையே பேசுகின்ற பகைவர் களைப்போல் அவளும் இயல்பறியாது சென்றாள் என்பதாகும். இந்த இடத்தில் பொய்யாமொழி என்பது பொய் பேசாதவர் என்பதற்குப் பதிலாக பொய் ஆம் மொழி என விரித்து பொய்யை யையே பேசி தீமை செய்பவர் என்னும் பொருள் வரும்படி பாடினான் முருகன்

இவ்வாறு புலவருடன் இலக்கிய விளை யாட்டில் முருகன் ஈடுபட்டு அருள் பாலித் தான். இத்திருவிளையாடலை அருணகிரிநாதர், படிக் காசுப்புலவர்அந்தகக்கவி வீரராகவ முதலி யார் முதலானோர் தனிச் சிறப்புடன் தமது நூல்களில் குறித்துள்ளனர்.

அக்னியின் வடிவமாகவும், பதுமராகத்தின் நிறத்தோடும் விளங்குவதால் சேவலைச் செஞ்சேவல் என அழைக்கின் றனர். சேவல் சிவப்பு நிறத்துடன் விளங்குவதனும் அதைச் செஞ்சேவல் எனப் போற்றுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேவல் கொடிகள்

ஆல்யத்தின் முன்புறம் அமைந்த சேவல் கொடிகள்



முருகனுக்குரிய கொடியாகச் சேவற் கொடி சொல்லப்பட்டாலும் ஆகமப்படி முருகன் கோயில் களில் மயில் எழுதிய கொடியை ஏற்றுவதே மரபாக இருந்து வருகின்றது. கோழிக் கொடியைச் செப்பு அல்லது பித்தளையால் பெரியதாகச் செய்து (கொடி மரம் பலி பீடத்திற்குப் பின்னால்) நிலைப்படுத்தியுள் ளனர். இக் கொடி வழக்கம் போலச் சதுரமாக அமையாமல் ᗒ வடிவில் அமைந்துள்ளது. இதன் மையத்தில் முருகனை நோக்கியவாறு கோழி தலையை நிமிர்த்தி உடலைச் சிலிர்த்துக் கொண்டு கூவும் கோலத்தில் உள்ளது.

பழனியில் பழனி ஆண்டவர் சந்நிதிக்கு முன்பு இத்தகைய பெரிய சேவல் கொடி ஒன்றுள்ளது. அதன்மீது உயிருள்ள சேவல் ஒன்று அமர்ந்து அடிக்கடி கூவுவ தைப் பக்தர்கள் கண்டு மகிழ்கின்றனர்.

கொக்கறுக்கோ

சேவல் தனது சிவந்த கொண்டையைச் சிலிர்த்துக் கொண்டு நெஞ்சை நிமிர்த்திக் கொக்கரக்கோ என்று கூறுகிறது. இதற்கு கவிவாணர்கள் பலவிதமான பொருள் களைக் கூறுகின்றனர். அவற்றிலொன்றை இப்போது காணலாம்.

கொக்கு அறு + கோ என்று இச்சொல் பிரிக்கப்படுகிறது. கொக்கு என்றால் மாமரம். அறு என்றால் வெட்டுதல் அல்லது அழித்தல் என்று பொருள். கோ என்றால் தலைவன் என்பதாகும். பல மாயங்களைச் செய்த சூரபத்மன் இறுதி யில் ஒரு மாமரமாகிக் கடலின் நடுவில் நின்றான். முருகன் தனது நீண்ட வேலைச் செலுத்தி அதனைப் பிளந்தான். இதை உணர்த்தும் வகையில் மாமரமாகிய கொக்கினை அரிந்த தலைவனே என்று பொருள்பட சேவலானது கொக்கரக்கோ என்று கூவுகிறதென்பர்.

உக்ர காலாயுதம்

சேவலுக்கு உக்ரசேவல் என்பதும் பெயராகும். நெருப்பில் இருந்து தோன்றியதாலும், கோபம் நிரம்பியதாகவும் இருப்பதால் அதுஉக்ர மயமானதாக விளங்குகிறது. அது காலையே ஆயுத மாகக்கொண்டு எதிரிகளின் குடலை உருவுவதால் காலாயுதம் என்றும் போற்றப்படுகிறது. அன்பர்கள் முருகன் அதைக் கொடியில் கொண்டிருப்பதால் அவனை காலாயுதக் கொடியோன் என்றழைக்கின்றனர்.

அருணகிரிநாதர் உலகேழையும் அதிர அரற்று கோழியென்றும் பொருகால் சேவல் என்றும் கூறுகின்றார். சேவலை வடமொழியில் குக்குடம் என்பர். அதையொட்டி முருகன் குக்குடத் துவஜன்என்று அழைக்கப்படுகின்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடியை வாழ்த்துதல்

அரசனின் வாள், வீரம், கொடி, முரசு ஆகியவற்றைச் சிறப்பித்துப்பாடும் வழக் கம் நெடுநாட்களாக இருந்து வருகின்றது. பண்டைக் காலத்தில் சேவற் கொடியை ஏற்றிவைத்து அதையே முருகனாகப் பாவித்துப் போற்றிப் பாடிப் பரவும் வழக்கம் இருந்து வந்தது. மலையகங்களில் உள்ள சோலைகளில் சூரர மகளிர் சேவற்கொடிகளை ஏற்றிவைத்து அதைச் சுற்றி ஆடிப்பாடு வதும், அவற்றால் மகிழ்ந்து முருகன் அவர்களுக்கு அருள்புரிவதும் குறிக்கப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படையில் சூரர மகளிர் சேவற்கொடிகளை நட்டு ஆடிப்பாடி வணங்கும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்களில் "சேவலங்கொடியோன்" ஆன முருகன் மக்களைக் காக்க வேண்டுவது பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. குறுந்தொகையின் காப்புப் பாடல் முருகனை சேவலங்கொடியோன் காப்ப என்கிறது.

சேவற்கொடியை வாழ்த்திப் பல பாடல்கள் அன்பர்களால் பாடப்பட்டுள்ளன.

(சங்க இலக்கியங்களில் கருடனும் சேவல் என்றே அழைக்கப்படுகிறான். அவனை உவணச்சேவல் என்பர். திருமால் கருடக்கொடியோன் ஆதலின் சேவலங்கொடியோன் என்று அழைக்கப்படுகிறான். அந்தக் கருடன் ஆதிசேடனை வாயில் கௌவிக் கொண்டுள்ளான். ஆயிரந்தனை அரவு வாய்க்கொண்ட சேவலூர்த்திச் செங்கண்மால் என்று திருமால் கொண்டாடப்படுகிறார்.)ன

மயூரதீபமும் குக்குட தீபமும்

ஆலயங்களில் இறைவனுக்கு முன்பாக சுழற்றிக் காட்டப்படும் தீபங்களில் குக்குட தீபமும் மயூர தீபமும் இடம் பெற்றள்ளன. மயூர தீபத்தின் பீடத்தில் மயில் உருவம் இருக்க பிரபையில் ஐந்து தீபங்கள் பிரகாசிக்கின்றன. கோழி தீபத்தில் சேவலின் உருவமும் அதைச் சுற்றி அமைந்த பிரபையில் ஐந்து தீபங்கள் ஒளி விடுகின்றன. இந்த தீபங்களுக்கு அதிபதி முருகன். இவற்றைச் சுழற்றிக் காட்டும்போது மயூர காயத்ரியும், குக்குட காயத்ரியும் ஓதப் படுகின்றன.

மயில் குக்குட நடனம்

சூரசம்ஹார விழாவில் முருகன் சூரனை சம்ஹரித்த பிறகு அவன் மயிலாகவும், சேவலாகவும் ஆனதை நினைவூட்டும் வகையில் மயில் வடிவத்தையும், சேவல் வடிவத்தையும் ஒரு பீடத்தில் எழுந்தருளுவித்து நடனமாடியவாயே மும்முறை முருகனைச் சுற்றி வருவர். அப்படி வரும் போது ஆடியவாறே வருகின்றனர்.

செங்குந்தர்களின் சேவற்கொடி



செங்குந்தர்கள் எனும் கைக்கோள முதலியார்கள் தங்களை முருகப்பெருமானின் தம்பியர்களான நவவீரர்கள் வழியில் வந்தவர்கள் என்று கூறுகின்றனர். இவர்கள் சோழர் களின் ஆட்சியில் தனிப் பெரும்படையாக இயங்கி வந்தனர். இவர்கள்தங்கள் கொடியில் முருகனின் தம்பியர் வழியினர் என்பதைக் குறிக்க வேலையும் சேவலையும் சோழர்களுக்கு உரிய சின்னமான புலியையும் தமது சின்னமாகக் பொறித் துக்கொண்டனர் இவர்களின் கொடியில் இம்மூன்று இலச்சினைகளையும் காணலாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேவல் வாகனம்

முருகனை மயில்வாகனர் என்றும் ,சேவற்கொடியோன் என்றும் போற்றுகின்றனர். பூஜாபத்ததி நூல்கள் ஆலயங்களில் மயில் கொடியை ஏற்றும்படியும், சேவல் வாகனத்தில் முருகப் பெருமானை பவனி வரச் செய்யும்படி கூறுகின்றன. குமார தந்திரம் என்னும் நூலில் சேவல் வாகன சேவை கூறப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் சேவல் வாகனம் எங்கும் இல்லை.

சேவல் அலங்காரம்

அருணகிரிநாத சுவாமிகளால் கந்தர் அலங்காரம் பாடப்பட்டுள்ளதை அறிவோம். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் வேல் அலங்காரம், வாள் அலங்காரம், மயில் அலங்காரம் ஆகியவற்றைப் பாடியுள்ளார். இதையொத்துக் குமாரசிவம் என்ற புனைப்பெயர் கொண்ட கோவை மதுரகவி வித்துவான் இராமசாமி அவர்கள் 1970 ஆம் ஆண்டில் சேவல் அலங்காரம் என்ற நூலைப் பாடியுள்ளார்.

இது விநாயக வணக்கமாகக் குறள் வெண்பா ஒன்று, வித்யாகுரு வணக்கமாக விருத்தம் ஒன்று, கட்டளைக் கலித்துறையில் 30 பாடல்கள், கொச்சகக் கலிப்பாவில் 10 பாடல்கள் ஆக 42 பாடல்களைக் கொண்டது. இதில் ஒரு பாடலை இங்கு காணலாம்.

அருஞ்சேவல் அன்பர் இதயத் தலத்தி(ல்) அறவடியாய்
வருஞ்சேவல், என்றும் புகரில் செஞ்சேவல் எம் வல்வினையைப்
பொருஞ்சேவல் என்றே பெரியோர் துதிக்கும் புகழ் நலங்கள்
தெரிஞ்சேவல் செயமின்கள் எம்பெருமான் கொடிச் சேவலுக்கே

முக்தி பெற்ற சேவல்

குமாரமஞ்சரியின் 2ஆம் மலரில் முருகனுக்குரிய மயிலும் சேவலும் உயர்ந்த பதவிகள் என்றும், ஆன்மாக்கள் தனது அரிய தவங்களால் அதனை அடையலாம் என்றும் கூறப்பட்டதை அறிந்தோம். முருகன் சூரனையும் பதுமனையும் சூரபத்மனாகப் பிறக்க அருள் செய்து, பின்னர் அவனை வென்று சேவலும் மயிலுமாகக் கொண்டார்.

அதற்கு முன்பே அவரிடம் மயிலும் சேவலுமாக இருந்த ஆன்மாக்கள் அவரை வணங்கியபோது அவர் சிவலிங்க பூசையொன்றே முத்தியளிக்க வல்லது. எனவே, நீங்கள் முத்தியின்பம் பெற சிவபூசை செய்யுங்கள் என்றார். அதன்படியே அவை காஞ்சிபுரத்திற்குத் தெற்கில் உள்ள கடம்பர் கோயில் எனும் திருத்தலத்தையடைந்து சிவலிங்கத்தை வழிபட்டுப் பேறுபெற்றன. அவற்றிற்குச் சிவபெருமான் முத்தியின்பம் வழங்கினார் என்று கடம்பர் கோயில் புராணம் கூறுகிறது

வேழமயிலும் வேடமயிலும் உடனாக நீலமயில் மீது ஞாலம் வலம் வரும்
சேவலம் கொடியோன் அருளால் அன்பர்கள் எல்லோரும்
எல்லாமும் பெற்று இனிது வாழ்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

திருச்சிற்றம்பலம் ஆரூரா தியாகேசா

அண்ணாமலையெம் அண்ணா போற்றி ! கண்ணார் அமுதக் கழலே போற்றி !

என்றும் இனிய அன்புடன் ....

பேரன்பிற்குரிய சிவநேயச் செல்வப் பெருந்தகையீர்,

வணக்கம். எல்லாம் வல்ல சிவபெருமானின் அருளினால் குமாரமஞ்சரியின் 2ஆவது மலராகச் "நீலமயிலும் செஞ்சேவலும்" என்ற இந்த மலர் மலர்ந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இவ்வேளையில் இப்பணிக்குத் திருவருளும் குருவருளும் வழங்கி அருள்பாலித்து வரும் திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீன குரு மகா சந்நிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

அவர்களின்திருவடிகளையும், இப்பணிக்கு அன்பும் ஆசியும் தந்து வரும் எமது குருநாதர்நுங்கம்பாக்கம்

குருஜி சிவஸ்ரீ. துரைராஜன் (எ) பத்மநாபன்

அவர்களையும்போற்றி வணங்குகிறேன்.

மேலும், இப்பணிக்கு நல்லாதரவு தந்து வரும் எனது அன்பிற்கினிய சகோதரி திருமதி. அனந்தலட்சுமி, அவரது கணவர் கயிலைமணி திரு. வ. வீரராகவன், அருட்பணி அரசு திருப்பணிச் செல்வர் சிவஸ்ரீ Er.M.V. ஜெய்சங்கர் B.E., ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

. இந்நூலுக்கு மேலான ஆலோசனைகளை வழங்குவதுடன் அச்சுப்படிகளைத் திருத்திச்செம்மைப்படுத்தி உதவிவரும் அடையாறு கற்பகம் கார்டன்ஸ் பிரம்மஸ்ரீ G.S. நடராஜன் அவர்களுக்கும், அவருடைய குமாரர் குமார் (எ) பாலசுப்பிரமணியம், அவர்களுக்கும் , படங்கள் தந்துதவிய மயிலை ஏ.ராஜ், பனையபுரம் திரு.அதியமான், வலையப்பேட்டை குகஸ்ரீ கிருஷ்ணன் ஆகியோருக்கும் ஓவியங்கள் வரைந்தளித்த மயிலை .காசி ஸ்தபதியாருக்கும்

இந்நூல் திருத்தணிகை திருப்படி விழாவில் வெளியிட சிறந்த முயற்சிகளை மேற்கொண்ட CLRI டாக்டர் துரைரராஜ் அவர்களுக்கும், அருட்கொடை வழங்கி உதவிய அன்பர்களுக்கும் எனது நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்

இங்ஙனம்..

திருத்தணிகை திருப்படித் திருவிழா
(01-01-2010) வெள்ளிக்கிழமை

பூசை. ச. அருணவசந்தன் (எ) பூசை.ச.ஆட்சிலிங்கம்

சிவசுந்தரி கலைக்கூடம் : 29, பீமன்ன முதலி கார்டன் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

குமாரமஞ்சரி : குமரப்பெருமானின் பெருமைகளைப் பேசும் நூல்

முருகப்பெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy